





Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 184 குரோதி வருடம், மாசி மாதம் 22ஆம் திகதி வியாழக்கிழமை
(06.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 05, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12







## தேங்காய் தட்டுப்பாடு வருமா?



பக்கம் 03

## இந்தியா - சீனாமீது அமெரிக்கா வரி விதிப்பு



பக்கம் 10

## 2025 ஆசியக்கிண்ணம் இலங்கையில்?



பக்கம் 10

# மீனவர் பிரச்சினையை இந்தியாவே தீர்க்கலாம்!

## வடக்குத் தமிழர்களுக்கு அதுவே பெரும் உதவி என்கிறார் பிமல்



''வடக்கு கடலில் இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையை இந்தியாவால் சுலபமாகத் தீர்த்துவைக்கலாம். அதுவே இந்தியா வடக்கு தமிழர்களுக்குச் செய்யும் உதவியாகவும் இருக்கும்'' - என அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க நேற்று(05) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீன்பிடி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

''நாட்டில் வடக்கு மாகாணத்தில் தான் அதிகளவான மீனவர்கள் இருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மீன்பிடி மற்றும் மீன்பிடி சார்ந்த தொழில்களில் ஈடுபடுகிறார்கள். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் குருநகர் போன்ற பகுதிகளில் மிகவும் கஷ்டமான மக்கள் வாழ்கிறார்கள். » 02 பக்கம்

## டேசி பொரஸ்ட்டுக்கு பிணை



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்று (05) கைதுசெய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டேசி பொரஸ்ட் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்குமாறு கடுவல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிதிமோசடிச் சம்பவமொன்று தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றிருந்தபோதே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவரை கடுவல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. » 02 பக்கம்

## பழுதான எண்ணெய் சந்தையில்

### அமைச்சர் வசந்த சமரசிங்க தகவல்



தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும் ஒருசில நிறுவனங்கள் பாவனைக்குதவாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்வதாகவும் அவை சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுவதாகவும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். » 02 பக்கம்

## சி.சி.ரி.வியுள்ள பஸ்களுக்கு மாத்திரமே அனுமதி



» 02பக்கம்

## 'கிழக்கில் அடிப்படைவாதம்' கூற்றுக்கு விளக்கம் என்ன?

### பதில் கோருகிறார் நிசாம் எம்.பி.



''கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றினூடாக எம்மீது பழிசுமத்த பல தீயசக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள இந்தச் சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும். இவ்வாறான கூற்றுகளைக் கொண்டு பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம். எனவே, இந்தக் கூற்றின் உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்'' - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்... » 02 பக்கம்

## இ - 8 விசாவுக்கு அமைச்சரவை அனுமதி




» 02பக்கம்

## மலையகத் தமிழர்களை புறக்கணிக்காதீர்கள்!

### எல்லை நிர்ணயத்தை திருத்தக் கோருகிறார் ஜீவன் எம்.பி.



''நாட்டில் கடந்த 1948முதல் 1977ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயத்தில் மலையகத் தமிழர்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாகவே அரச சேவைகள் மலையக மக்களுக்கு முழுமையாகச் சென்றடைவதில்லை. » 02 பக்கம்

## நாயாறு பிரதேசத்தில் தெற்கு மீனவர்களின் ஆதிக்கம்

### உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



''முல்லைத்தீவு, நாயாறு பிரதேசத்தில் பருவகாலத்தில் மாத்திரம் தெற்கிலிருந்து வரும் மீனவர்கள் தற்போது நிரந்தரமாகவே அங்கு தங்கிவிட்டனர். கடற்படையினரின் உதவியுடன் அங்கு... » 02 பக்கம்

## சுகாதாரத்துறை நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் இன்று

### சம்பள அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அமைச்சர் வலியுறுத்து




''சுகாதார அமைச்சுக்கான நிதியொதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் இன்று இடம்பெறவுள்ளது. இந்நிலையில், சுகாதாரப் பிரிவிலுள்ள ஒருசில தொழிற்சங்கங்கள் துறைசார் தவறான... » 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



முஸ்லிம் மினிஸ்டர் ஓராள் அமைச்சரவையில் இருந்திருந்தா இந்த அடிப்படைவாத பிரச்சினைகளையெல்லாம் பார்த்திருப்பாரே... இப்பத்தானும் நியமிச்சா என்னவாம்...

### உஷ்



இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்களுக்கு பாராளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தில் உரையாற்ற வாய்ப்புகள் முறையாகக் கிடைப்பதில்லையென குமுறிக்கொண்டிருப்பதாகத் தகவல்.

தமிழரசுக் கட்சியைச் சார்ந்த ஒருவர் மாத்திரமே அதிகளவு நேரத்தை எடுத்துக்கொள்வதால் முக்கியமான துறைகளில் உள்ள பிரச்சினைகள், தமது தொகுதிப் பிரச்சினைகள் என்பனவற்றைச் சுட்டிக்காட்ட முடியாமல் இருப்பதாக அவர்கள் கவலைப்படுவதாக அறியமுடிகின்றது.

## கைதிகளுக்கான வாக்களிக்கும் உரிமை குறித்து ஆராய்வு!

### உயர்நீதிமன்றத்தில் வெளியானது தகவல்



தேர்தல்களின்போது தடுப்புக்காவல் கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை தேர்தல் ஆணைக்குழுவும் சிறைச்சாலைகள் திணைக்களமும் ஆராய்ந்து வருவதாக... » 02 பக்கம்



## இ - 8 விசாவுக்கு...

கொரியாவின் இ - 8 விசாவுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அதற்கமைய, இ - 8 விசாவினூடாக முதலாவது குழுவை சாதாரண கட்டணத்தின் அடிப்படையில் குறுகிய காலத்தில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் கொரியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே பிரதி அமைச்சர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கொரியாவின் இ- 8 விசாவுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. இ - 8 விசா தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளதாக பரப்பப்பட்டுவரும் போலி தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இடைத்தரகர்களினூடாக பண கொடுக்கல் வாங்கல்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் இனிமேல் இடம்பெறாது.

மிகவும் சாதாரண தொகையின் அடிப்படையில் மிகக் குறுகிய காலப்பகுதியில் இ - 8 விசாவினூடாக முதலாவது குழுவை அரசாங்கத்தின் தலையீட்டுடன் கொரியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்போம்.

மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாக தொடர்புபட்டு தீர்வை பெற்றுக்கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேபோன்று, துறைசார் முயற்சிகளுக்காக நிறுவனத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை ஏற்கவும் தயாராக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## மலையகத் தமிழர்களை...

இன்றைய பிரச்சினைக்கும் இதுவே பிரதான காரணமாகும். ஆகவே, எல்லை நிர்ணயம் திருத்தம் செய்யப்பட வேண்டும்'' என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று(05) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், நாமல் ராஜபக்ஷ மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றி விசேட கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார்கள். அதற்காக மலையக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹட்டன், செனன் தோட்டத்தில் கே.எம்.பிரிவில் 100 பேர் வாழ்கிறார்கள். 26 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. இதனால் அப்பகுதியிலுள்ள சகலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரையில் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. நான் நேரடியாகச் சென்று தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன். எம்மால் இயலுமான வகையில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பெருந்தோட்டப் பகுதிகளில் சுமார் 3,500 வீடுகள் தீ மற்றும் இதர அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன. தீ விபத்தை அனர்த்தத்துக்குள் உள்ளடக்க முடியாது என்ற தவறான கொள்கை நீண்டகாலமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக வீடுகளில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கவில்லை. தோட்டப் பகுதிகளில் வீடுகள் தீ விபத்துக்குள்ளாவதை தோட்டக் கம்பனிகளின் அதிகாரிகள் விரும்புகின்றனர். ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் அந்தப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறுவார்கள்.

அவர்களுக்கு அரசாங்கம் வீடுகளை வழங்கும். இவ்வாறு வீடுகள் வழங்கப்படும்போது அவை தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரமே தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்படுகிறது. தோட்டங்களில் வேலை செய்யாத பலர் இன்றும் தோட்டங்களில் தான் வாழ்கிறார்கள். ஆகவே, இவ்விடயத்தை அரசாங்கம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டப் பகுதிகளில் சுமார் 01 இலட்சத்து 10 ஆயிரம் பேர் தொழில்புரிகிறார்கள். அரசாங்கத்தினால் வழங்கப்படும் நலன்புரி சேவைகள் பெருந்தோட்ட மக்களுக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை. பெருந்தோட்ட மக்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமும் கிடைப்பதில்லை. கொரோனா மற்றும் பொருளாதாரப் பாதிப்பு ஆகிய காரணிகளால் பெருந்தோட்டப் பகுதிகளின் வறுமை நிலை 57 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

ஒருவருக்கொருவர் விமர்சித்துக் கொண்டிருக்காமல் மலையகத்தின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். 1948முதல் 1977ஆம் ஆண்டுவரை மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கவில்லை. அந்த காலப்பகுதியில் தான் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. மலையகத் தமிழர்களை கணக்கெடுப்பில் சேர்க்காமலேயே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது.

மலையகத்தை தவிர்த்து ஏனைய பகுதிகளில் 250முதல் 500பேருக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு காணப்படுகிறது. ஆனால், மலையகப் பகுதிகளில் 8,000 பேருக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு காணப்படுகிறது. எல்லை நிர்ணயத்தில் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டமையின் விளைவே இது. எல்லை நிர்ணயத்தில் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டமை திருத்தியமைக்கப்பட வேண்டும். அப்போது தான் அரச சேவைகள் முழுமையாக மலையக மக்களைச் சென்றடையும்.

ஆகவே, இதில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. சமுர்த்தி சேவையாளர்கள், கிராம சேவையாளர்கள் தோட்டப்பகுதிகளுக்கு செல்வதில்லை. இதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் பொறுப்பல்ல. முறைமையில் மாற்றம் வேண்டும். மலையகப் பகுதிகளில் எல்லை நிர்ணயத்தை புதுப்பிக்காமல் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. அரசாங்கத்திடம் பெரும்பான்மை பலம் உள்ளது. ஆகவே தீர்மானங்களை கொண்டு வாருங்கள் நாம் முழுமையான ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளோம்'' என்றார்.

## டேசி பொரஸ்ட்டுக்கு...

இதன்போது 50 இலட்சம் ரூபா கொண்ட மூன்று தனிப்பட்ட பிணைகளின் அடிப்படையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

யோசித ராஜபக்ஷ மற்றும் டேசி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராக இதற்கு முன்னர் சட்ட மா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 2012 மற்றும் 2015ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் 800 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இரத்மலானை, சிறிமல் உயன மற்றும் தெஹிவளை பிரதேசத்தில் காணி மற்றும் சொத்துகளை கையகப்படுத்திய விதம் தொடர்பில் வெளிப்படுத்தாமை தொடர்பிலேயே இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் அண்மையில் யோசித ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்டி ருந்ததுடன், பின்னர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சுகாதாரத்துறை...

புரிதலில் சுகாதார சேவையிலுள்ள ஒருசில துறைகளுக்கு இடையூறு ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். தவறான வழிநடத்தலுக்கு அமைவாக செயற்பட வேண்டாம். கலந்துரையாடல்களுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். வழங்கப்பட் டுள்ள உயர் சம்பள அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். பின்னர் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்கலாம்'' என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று(05) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''சுகாதாரத்துறையிலுள்ள ஒருசில தொழிற்சங்கக்குழுவினர் தமது துறையில் சரியான புரிந்துணர்வின்றி சுகாதாரத்துறையிலுள்ள சில துறைகளில் இடையூறு ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர். கலந்துரையாடலை தொடர்ந்து வைத்தியர்கள் அவர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளனர். சுகாதாரத்துறைசார் தொழில் நிபுணர்களுக்கு உரித்தான நான்கு பிரதான குழுக்கள் இருக்கின்றன. சுகாதார சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதார சேவையாளர்களின் சம்பளம், மேலதிகக் கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கான கொடுப்பனவு முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவையில் துணைநிலை மருந்தாளர் பிரிவில் மூன்றாம் தரத்தில் உள்ள வைத்தியரின் மேலதிகக் கொடுப்பனவு 285 ரூபாவாகவும் இரண்டாம் தரத்திலுள்ள வைத்தியர்களின் மேலதிகக் கொடுப்பனவு 340 ரூபாவினாலும் முதலாம் தரத்தில் உள்ள வைத்தியர்களின் மேலதிகக் கொடுப்பனவு 415 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், விடுமுறைக்கான கொடுப்பனவில் மூன்றாம் தரத்தின் கொடுப்பனவு 200 ரூபாவினாலும் இரண்டாம் தரத்தின் கொடுப்பனவு 251 ரூபாவினாலும் முதலாம் தரத்தின் கொடுப்பனவு 325 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரச சேவையாளர்களின் சம்பளம், மேலதிகக் கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சம்பள அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு சுகாதார சேவையாளர்களிடம் கேட்டுக்கொள் கிறேன்.

ஒருசில தொழிற்சங்கத் தலைவர்களின் தவறான வழிநடத்தலுக்கு அமைவாக செயற்பட வேண்டாம் என்று சுகாதாரப் பணியாளர்களிடம் வலியுறுத்துகிறேன். தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம். பிரச்சினைகள் இருந்தால் அதுதொடர்பில் கலந்துரையாடி முடிவுக்கு வர நாங்கள் தயாராக இருக்கிறோம். வழங்கப்பட்டுள்ள உயர் சம்பள அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். அதனை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு சேவையை பெற்றுக்கொடுங்கள். சகலரும் இணைந்து பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொண்டு அடுத்தக்கட்ட செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்கலாம்'' என்றார்.

## கைதிகளுக்கான...

சட்ட மா அதிபர் நேற்று (05) உயர்நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

கைதிகள் தேர்தலில் வாக்களிப்பதற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பைத் தயாரிக்க தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரி, முன்னாள் கைதி சுதேஷ் நந்திமால் டி சில்வா தாக்கல்செய்த மனு, நேற்று விசாரணைக்கு வந்தது. சட்ட மா அதிபரின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சஜித் பண் டார, நீதியரசர்கள் ஏ.எச்.எம்.டி.நவாஸ், அச்சல வெங்கப்புலி மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன் அழைக்கப்பட்டபோது சட்ட மா அதிபரின் இந்த அறிவிப்பு வெளியானது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்ஷன் டயஸ், இதுவரை சுமார் 66 நாடுகள் தங்களின் கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளதை நீதிமன்றத்தில் ஆதாரங்களை முன்வைத்து சுட்டிக்காட்டினார். மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவும் கைதிகளுக்கு அந்த உரிமை வழங்கப் பட வேண்டும் என்ற அவதானிப்புகளை சமர்ப்பித்துள்ளதாகக் கூறினார்.

அப்போது, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சஜித் பண்டார, கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதில் பல நடைமுறை சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். அரசியலமைப்பின் கீழ் தேர்தல் ஆணைக்குழு சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த கடமைப்பட்டிருந்தாலும் சிறையில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதில் நடைமுறை சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று சுட்டிக்காட்டிய அரச சட்டத்தரணி இந்தக் காரணத்துக்காகவே, பல நாடுகள் கைதிகளுக்கு அந்த உரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தற்போது வரையப்பட்டு வரும் புதிய தேர்தல் சட்டத்தின் கீழ் சிறப்பு வாக்க ளிப்பு நிலையங்களை நிறுவ முன்மொழியப் பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைக ளில் இந்த வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

மேலும், கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதற்கான திட்டத்தை தயாரிப்பது குறித்து தேர்தல் ஆணை யமும் சிறைச்சாலைகள் துறையும் ஆய்வு செய்து வருவதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

எனவே, இந்த விவகாரங்களின் முன்னேற்றம் குறித்து தெரிவிக்க ஆறு மாத கால அவகாசம் அளிக்குமாறு அரச சட்டத்தரணி மேலும் நீதிமன்றத்தைக் கோரினார்.

கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவது தொடர்பாக தனது கட்சிக்காரர் ஆய்வுகள் நடத்தியதாகவும் அது தொடர்பான அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் பெவ்ரல் அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்திற்கொண்ட நீதியரசர்கள், மனுவை ஓகஸ்ட் 28ஆம் திகதி மீண்டும் விசாரிக்க உத்தரவிட்டனர். அன்றைய தினம் இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்துக்குத் தெரிவிக்குமாறு அரச சட்டவாதிக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

## சி.சி.ரி.வியுள்ள பஸ்களுக்கு...

தனியார் பஸ்களில் சி.சி.ரி.வி. பாதுகாப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டிருக்குமாக இருந்தால் மாத்திரமே அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதேபோன்று, பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்பில் தகவல் வழங்குவதற்கு தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பீ.டீ.விதாரண தெரிவித்தார்.

பொது போக்குவரத்தின்போது பெண்களுக்கு எதிராக இடம்பெறும் துஷ்பிரயோகங்களை தவிர்ப்பதற்காக நீண்டகால வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியது அவசியமென்றும் பொதுப்போக்குவரத்தை பெண்களுக்கு பாதுகாப்பான சேவையாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் தற்போது பரந்துபட்டளவில் விளக்கம் பெறப்பட்டுள்ளது. தண்டனை கோவைச் சட்டத்தின் 345ஆவது உறுப்புரையின்கீழ் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் தண்டனைக்குரிய குற்றச்செயலாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான சட்டங்களும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் சமூகத்தில் கருத்தாடலை உருவாக்க வேண்டும். தற்போதைய காலப்பகுதியில் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்தின்போது பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் தனியாக போராட வேண்டியுள்ளது. இதற்காக ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றுதிரட்ட வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன'' என்றும் சுட்டிக்காட்டினார்.

## மீனவர் பிரச்சினையை...

கடற்றொழிலை மேம்படுத்துவதை போன்று அந்த தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும்.

அதற்கான பொறுப்பு கடற்றொழில் வளங்கள் அமைச்சுக்கு உண்டு.

வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி மற்றும் அதனுடனான இணை கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடக்கில் அதிகளவான கடற்றொழிலுடன் தொடர்புடைய வளங்கள் காணப்படுகின்றன. அதிக வளங்கள் இருந்தபோதும் வடக்கிலுள்ள மீனவர்கள் தெற்கிலுள்ள மீனவர்களை விட வறுமையில் இருக்கிறார்கள்.

இந்திய மத்திய அரசிடமும் தமிழ்நாடு அரசிடமும் விசேட கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். யுத்தம் மற்றும் பல்வேறு காரணிகளால் இலங்கையர்கள் படகு ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லும்போது அவுஸ்திரேலிய அரசாங்கம் படகு ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு வர வேண்டாம் என்று பல விளம்பரங்களை அழுத்தமாக வெளியிட்டார்கள். அத்துடன் சட்ட ரீதியிலான அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

மீன்பிடி கைத்தொழிலை தவிர்த்து வடக்கு மக்களுக்கு வேறு எந்த வாழ்வாதாரமும் கிடையாது. போர்க் காலத்தில் வடக்கு மக்கள் இந்தியாவுக்கு சென்றபோது மக்களை இந்திய அரசு மதித்தது. அதனை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், தற்போது வடக்கு மக்களுக்கு செய்யவேண்டிய முக்கிய பொறுப்பாக, வடக்கு மக்களின் ஒரே ஜீவனோபாயத்தை இல்லாதொழிக்க இடமளிக்க வேண்டாம் என்று இந்திய அரசிடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். இந்தியாவில் உள்ள சட்டங்களை செயற்படுத்துங்கள். இவற்றை செயற்படுத்தாமல் வடக்கு மக்களின் நலன்புரி பற்றி பேச முடியாது'' என்றார்

இதன்போது எழுந்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்,

''உங்களின் கருத்து மிகவும் முக்கியமானது. இந்தியப் பிரதமர் எதிர்வரும் மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். ஆகவே தயவுசெய்து பேச்சுவார்த்தை ஒழுங்கில் இந்த விடயத்தையும் இணைத்துக் கொள்ளுங்கள். வடக்கு மக்களுக்கு இது பாரியதொரு பிரச்சினை. எமது சொத்துகளை கொள்ளையடித்துச் செல்கின்றனர். யுத்தம் முடிந்து 15 வருடங்களாகிவிட்டன. இந்தியா உதவி செய்தது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுங்கள் நாங்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்'' என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

''இது பாரதூரமான பிரச்சினை. அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளை இந்திய அரசாங்கத்தினால் நிறுத்த முடியும். இந்திய அரசாங்கம் இலங்கைக்கு பல உதவிகளை செய்கிறது. வடக்கு மக்களின் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் வழங்கும் உதவிகள் உண்மையானதாக அமையாது. இந்திய மீனவர்களின் எல்லை மீறல் செயற்பாடு நாளாந்தப் பிரச்சினையாகவே உள்ளது.

இந்திய அரசாங்கம் இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். மக்கள் சுதந்திரமாக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்க வேண்டும். இந்திய அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும். இந்தியப் பிரதமரின் விஜயத்தின் போது இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவோம். மக்கள் பாதிப்படையும்போது அவர்களை மீட்பது மாத்திரம் உதவியல்ல, அவர்களின் நலன்புரி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் முக்கிய உதவியாக கருதப்படும்'' என்றார்.

## பழுதான எண்ணெய்...

இவ்வாறு பாவனைக்கு உதவாத பொருட்களை இறக்குமதி செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''எமது நாட்டில் இறக்குமதி பொருளாதாரத்தில் இடம்பெறும் வியாபாரத்தில் இன்னுமொரு வியாபாரமாக இந்த தேங்காய் எண்ணெய் வியாபாரம் அமைந்துள்ளது. தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும்போது சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்யும் கொண்டுவரப்படுகிறது. சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய்யும் இறக்குமதி செய்யப்படுகிறது. 11 மாதங்கள் மாத்திரம் இயங்கும் தேங்காய் எண்ணெய் இறக்குமதி நிறுவனங்கள் நாட்டில் இருக்கின்றன என்பதையும் அடையாளம் கண்டுள்ளோம். 12ஆம் மாதமாகும்போது கணக்கறிக்கைகளை தயாரிக்காமல் நிறுவனத்தை மூடிவிட்டு சென்றுவிடுகிறார்கள்.

எனவே, இதுதொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபையின் சட்டத்தை வலுப்படுத்த வேண்டும். மறுபுறம், சுங்கத்தினூடாக நாட்டுக்குள் வரும் பாவனைக்கு பொருத்தமற்ற பொருட்களை தவிர்த்துக்கொள்வதற்கான நடைமுறைகள் தொடர்பில் துறைமுக அதிகார சபை மற்றும் சுங்கப்பிரிவினர் தற்போது அடையாளம் கண்டுள்ளனர். அந்த நடைமுறைகளையும் மீற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் சட்டத்தை திருத்துவோம். நுகர்வோர் விவகார அதிகார சபையின் சட்டத்தை திருத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

ஒருசில பொருட்களை இறக்குமதி செய்யும்போது அவற்றை பரிசோதிப்பதற்கு சரியான முறையொன்று எமது நாட்டில் இல்லை. சுங்கத்தின் பரிசோதனை நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நுகர்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்'' என்றார்.

## 'கிழக்கில் அடிப்படைவாதம்'...

பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் கோரினார். பாராளுமன்றத்தில் நேற்று (05) இடம்பெற்ற 2025 வரவு - செலவுத் திட்டம் மீதான கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் குறிப்பிட்டுள்ள விடயம் இன்று (நேற்று) தேசிய பத்திரிகைகளில் பிரதான செய்தியாக வெளிவந்துள்ளன. குறிப்பாக கல்முனை பகுதிகளில் மத அமைப்புகளினால் பிள்ளைகள் தீவிரவாத கற்பித்தலுக்காக பயன்படுத்தப்படுகிறார்கள் என்றும் அதன் காரணமாக உளவுத்துறையினர் கண்காணிப்புகளை அதிகரிக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தக் கூற்றினால் எமது பிரதேச மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் கூற்றுகளில் பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அமைப்புகளின் பெயர்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கல்முனை ஜும்ஆப் பள்ளிவாசல், பள்ளிவாசல் சம்மேளனம், ஜம்இய்யத்துல் உலமா சபை உட்பட இஸ்லாமிய அமைப்புகள், இஸ்லாமிய மக்கள் தீவிரவாதத்துக்கு எதிராகவும் தீவிரவாதம் தொடர்பான விசாரணைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுடனும் ஒன்றிணைந்து செயற்படத் தயாராகவுள்ளனர்.

இவ்வாறான அடிப்படைவாதப் போக்குகள் உள்ள குழுக்களின் பின்னணியையும் அவர்களுக்கு யார் நிதி வழங்குகிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள எமது மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

எனவே புலனாய்வு விசாரணைகள் சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு முன்னரும் முஸ்லிம் சமூகம் பல விடயங்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை விடுத்தும் உரிய அதிகாரிகள் பொறுப்புடன் செயற்படவில்லை. இதன் காரணமாகவே சஹ்ரான் தலைமையிலான குழுவினால் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

இதுபோன்று இன்னொரு சஹ்ரானின் சம்பவம் இந்த நாட்டில் இனி ஒருபோதும் இடம்பெறக்கூடாது. கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றினூடாக எம்மீது பழி சுமத்த பல தீய சக்திகள் முயற்சிக்கலாம். அமைச்சர்களின் கூற்றுகளை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள இந்த சக்திகள் நிச்சயம் முயற்சிக்கும்.

அதிகாரபூர்வமற்ற அறிவிப்புகள், வீண் அச்சம் மற்றும் சந்தேகங்களை ஏற்படுத்தும். இவ்வாறான நிலையை அரசாங்கம் ஏற்படுத்தக் கூடாது. இவ்வாறான பொதுவான கூற்றுகளினால் சமூகத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் செயற்படுகிறது என்ற பழைய - தவறான அபிப்பிராயம் மீண்டும் தோற்றுவிக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான கூற்றுகளை கொண்டு பேரினவாதிகள் எங்களை முடக்க முயற்சிக்கலாம். இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பதம் இஸ்லாமிய கொள்கைகளுக்கு முரண்பட்டது என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

எனவே, அமைச்சர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கிழக்கில் அடிப்படைவாதம் என்ற கூற்றை தெளிவுபடுத்தி அரசாங்கம் பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இதேவேளை, நோன்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இப்தார் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துகிறது. முஸ்லிம் வர்த்தகர்கள் பல கோடி ரூபா பெறுமதியான விளம்பரங்களை வழங்குகிறார்கள். ஆனால் இதுவரை காலமும் இரவு வேளையில் 01 மணித்தியாலமாக ஒலிபரப்பப்பட்ட இரவு வேளைக்கான இஸ்லாமிய நிகழ்ச்சி நேற்று (நேற்று முன்தினம்) வரை 45 நிமிடங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனை திருத்தம் செய்து கூட்டுத்தாபனம் வழமைபோல் 01 மணித்தியாலத்துக்கு இஸ்லாமிய நிகழ்ச்சியை நடத்த வேண்டும்'' என்றார்.

## நாயாறு பிரதேசத்தில்...

தங்கியுள்ள அவர்கள், அங்குள்ள மக்களின் தொழிலை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதனை உடனடியாக தடுத்து நிறுத்த கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) நடைபெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அந்த விவாதத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் கூறுகையில்,

''இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து எமது மீனவர்களின் தொழிலை அழிக்கும் வகையில் செயற்படுவது மிகப்பெரிய பிரச்சினையாகும். இதுவே வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கில் கடற்றொழிலாளர்களின் சொத்துகள் அழிவடைகின்றன. சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறும் சூழலை எடுத்துக்கொண்டால் வடக்கு, கிழக்கில் கடற்படையினர் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் முகாமை வைத்துக்கொண்டுள்ளனர். பொதுமக்களின் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் எதற்காக இருக்கின்றனர். தெற்கில் இவ்வாறான இருப்பு கிடையாது. இவ்வாறு இருந்துகொண்டு செய்ய வேண்டிய கடமைகளை சரிவர செய்யாது சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளில் இருந்து எமது மீனவர்களின் உடைமைகளை அழிப்பதற்கு விடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. கோடிக்கணக்கில் அவர்களின் உடைமைகள் அழிவடையும் நிலையில் இதற்கு அமைச்சு முழுமையான நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்று கோருகின்றேன்.

முதலில் இருந்த அரசாங்கங்கள் அக்கறை செலுத்தவில்லை. தமிழ் அமைச்சரை வைத்துக்கொண்டு இனவாத கோணத்தில் அவர்கள் செயற்பட்டமையினால் அக்கறை கொள்ளவில்லை. வடக்கு, கிழக்கில் கடற்றொழில் பொருளாதாரத்தின் மையமாகும். இதனை திட்டமிட்டு அழிக்கவே முன்னர் இருந்த அரசாங்கங்கள் செயற்பட்டன என்ற குற்றச்சாட்டை பகிரங்கமாக கூறுகின்றோம். இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை பேசும்போது அதற்கு தீர்வாக முன்னர் இருந்த கடற்றொழில் அமைச்சு கூறிய நியாயம் என்னவென்றால், வடக்கு, கிழக்கு தமிழ் மீனவர்கள் ஆழ் கடல் தொழிலுக்கு போக வேண்டும் என்பதாகவே இருந்தது. ஆனால் தமிழ் மீனவர்கள் அதனை விரும்பவில்லை என்று அந்த மீனவர்களை கொச்சைப்படுத்தும் வகையில் கூறினர்.

ஆனால் வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு ஆழ்கடல் தொழில் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இருந்திருந்தால் அரசாங்கம் அந்த மீனவர்களுக்கு பொருளாதார உதவிகளை செய்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை. இந்த அரசாங்கமாவது அதனை செய்ய முன்வர வேண்டும். இப்போதுள்ள அமைச்சர் அதற்கு முன்வர வேண்டும். இல்லையென்றால் உங்களின் அரசாங்கமும் கடந்த கால அரசாங்கங்களை போன்று தமிழ் மக்களை திட்டமிட்டு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் அரசாங்கம் போன்றே இருக்கின்றது என்றே கூறவேண்டிவரும்.

இதேவேளை, மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்தி செய்த பிறகும் அங்கு வாழும் மக்களின் தொழிலுக்கு பிரயோசனமானதாக இல்லை. ஆனால் தெற்கிலிருந்து வரும் படகுகளை பாதுகாப்பாக வைப்பதற்காகவே இதுவரையில் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் சட்டவிரோதமாக வந்ததாக பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் அங்கு இருப்பதாகவும் அறிய முடிகின்றது. அதனை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் சம்மேளனம் அல்லது வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுக்கு பொறுப்பாக வழங்க வேண்டும். அப்போதே அந்த மக்கள் அதில் பயனடைவர்.

அத்துடன் முல்லைத்தீவு, நாயாறு பிரதேசத்துக்கு வழமையாக தெற்கில் இருக்கும் நீர்கொழும்பு, புத்தளம், கற்பிட்டி போன்ற பிரதேசங்களில் இருந்து பருவக் காலமொன்றில் வருவர். குறிப்பாக ஏப்ரல் மாதத்தில் வருவர். ஆனால் இப்போது இந்த அரசாங்கம் வந்த பின்னர் ஜனவரியிலேயே வந்துவிட்டனர். படையெடுத்து வருவர். இப்போது அவர்கள் நிரந்தரமாகவே தங்கிவிட்டனர். இவர்கள் அங்குள்ள மக்களின் தொழிலை அழிக்கும் வகையில் செயற்படுவர்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அந்தந்த மக்களே தங்களுடைய கடலில் தொழில் செய்யும் நிலைமையை உறுதிப்படுத்த வேண்டும். இதனை விடுத்து இவ்வாறு வெளியிலிருந்து வந்து தொழில் செய்ய முடியாது. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் குடாரப்பு பிரதேசத்தில் கடலட்டை தொழில் செய்வதற்காக கடற்றொழில் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அங்கு இரண்டு பேருக்கே அந்த அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால் தெற்கில் உள்ளவர்களுக்கு அங்குள்ளவர்களின் பெயர்களை பயன்படுத்தி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பகல் நேரத்திலேயே தொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் இரவில் தொழில் செய்து அந்த பிரதேசத்தில் உள்ள வளங்களை அழிக்கும் வகையிலும் அந்த மக்களின் வலைகளை அழிக்கும் வகையிலும் செயற்படுகின்றனர். 1,200 பேர் கடலட்டை பிடிக்கும் பெயரில் செயற்படுகின்றனர் என்றால் எந்தளவுக்கு குறுகிய பிரதேசத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றது என்பதனை புரிந்துகொள்ளலாம்.

இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கற்கோவலம் தொடக்கம் நெடுந்தீவு வரையில் கடற்றொழிலாளர்களின் இறங்குதுறைகள் ஆழமாக்கவும் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தக் கூடியவகையில் கல் அணைகள் அமைப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் அபிவிருத்திக் குழுவில் முன்வைத்துள்ளேன். அதனை அவசரமாக செய்ய வேண்டும். இதற்காக பெரியளவில் நிதி தேவைப்படாது. ஏற்கனவே உள்ளவற்றை திருத்த வேண்டும். இதனால் அமைச்சர் இதில் தலையிட்டு செய்ய வேண்டும். அத்தோடு கரையோர பாதைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்'' என்றார்.

# தேங்காய் தட்டுப்பாடு வருமா?



இலங்கை மக்களின் உணவில் தேங்காய் பிரதான இடத்தைப் பிடித்திருக்கிறது. காரணம், ஏழை நடுத்தர மக்களின் செலவு குறைந்த, ஊட்டச்சத்து மிக்க உணவாகத் தேங்காய் இருக்கின்றது. உணவுப் பொருட்களின் விலையேற்றத்தின் பின்பு சுவையூட்டியாகவும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக்காகவும் தேங்காயைத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

இலங்கை மக்களின் பிரதான உணவில் தேங்காய் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கை போன்ற வெப்ப பிரதேசங்களில் வாழும் ஓடியாடி விளையாடித் திரியும் பிள்ளைகள் வியர்வையால் இழக்கப்படும் சக்தியை மீட்டெடுக்கும் ஊட்டச்சத்தாக தேங்காய் விளங்குகின்றது.

ஒரு துண்டு தேங்காயைத் தினமும் சாப்பிட்டால் உடலுக்கு அதிக சக்தியைக் கொடுக்கிறது. அத்தோடு, இது நோயெதிர்க்கும் ஆற்றலை அதிகரிக்கச் செய்யும். அதாவது உடலின் நோயெதிர்ப்பு ஆற்றலை இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்கிறது.

நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் தேங்காயில் என்டி-பாக்றீரியல் மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பண்புகள் அதிகமாக உள்ளன. எலும்புகள் மற்றும் பற்கள் வலுப்பெறும். புற்றுநோயைத் தடுக்கும். சர்க்கரை நோய் கட்டுப்படும். செரிமான ஆரோக்கியம் மேம்படும்.

எமது நாட்டின் மாதாந்திர தேங்காய்த் தேவை 250 மில்லியன் என்றும் அதில் 150 மில்லியன் தேங்காய்கள் உள்நாட்டு நுகர்வுக்கும் 100 மில்லியன் தேங்காய்கள் தொழிற்றுறைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில், நாட்டின் வருடாந்த மொத்த தேங்காய் உற்பத்தி 3,000 மில்லியன்களாக இருந்த போதிலும் கடந்த ஆண்டு அது 2,680 மில்லியன்களாகக் குறைந்துள்ளதாகவும் இந்த ஆண்டு தேங்காய் உற்பத்தி 2,400 முதல் 2,600 மில்லியன்களாகக் குறையுமென்றும் தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை 200 மில்லியன் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி ஏற்படுமென்று தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் கணித்துள்ளது.

இலங்கை மக்கள் கடந்த சில காலங்களாக தேங்காய் வாங்குவதற்குத் தேடியலைந்து திரிவதை அநேகரிடம் கேட்டால் கதை கதையாய்ச் சொல்வார்கள். தேங்காயின் சுற்றளவுக்கமையத் தான் அதற்கான விலையை நிர்ணயம் செய்திருந்தது. அது முதல் தேங்காய்க்கான செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதனையடுத்து அண்மைக்காலமாக தேங்காயின் விலையானது கணிசமாக உயர்வடைந்துள்ளது.

தேங்காய் ஒன்றின் விலையானது ரூபா 150 தொடக்கம் 300 ரூபாவரை உயர்ந்தது. கடந்த வாரங்களில் தேங்காய் ஒன்று 300 ரூபாவுக்கும் விற்பனைசெய்யப்பட்டுள்ளது. கொழும்பின் அநேக கடைகளில் ஒளித்து வைத்தே தேங்காய் விற்பனை செய்யப்படுகின்றது.

தெங்கு அபிவிருத்திச் சபையின் தகவலுக்கமைய கடந்த வருடம் 2.8 பில்லியன் தேங்காய்கள் வேளாண்மை செய்யப்பட்டுள்ளதுடன், இதில் 1.8 பில்லியன் தேங்காய்கள் உள்நாட்டு நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில், தெங்கு அபிவிருத்திச் சபைத் தலைவர் தேங்காயின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்குமெனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேங்காய் விலை அதிகரித்து வரும் நிலையில் நாட்டில் தேங்காய் ஏற்றுமதியை நிறுத்தவேண்டும். எப்போதும் இல்லாதவாறு தேங்காயொன்றின் விலை, 300 ரூபா வரை அதிகரித்துள்ளதால், மக்கள் அதிக சிக்கலை எதிர்கொள்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

நாட்டில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு நிலவுவதால் அரசாங்கம் நடமாடும் சேவையை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், கொழும்பில் தேங்காயைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள் நின்ற புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றன.

நாட்டில் தேங்காய்த் தட்டுப்பாடு இன்னும் மூன்று மாதங்களுக்கு நீடிக்குமென தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்னைப் பயிர்ச்செய்கை மழையின்மை மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நாட்டில் தேங்காய் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் தேங்காய் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஏற்றுமதி நோக்கங்களுக்காக தேங்காய் கருவை இறக்குமதி செய்வது தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு முக்கியமாக உர விலை அதிகரிப்பும் ஒரு காரணமாகும். தென்னைச் செய்கைக்கு தென்னை உரங்கள் மற்றும் இரசாயனங்கள் முறையாகப் பயன்படுத்தப்படாததாலும் ஏற்றுமதிக்கான உலர் தேங்காய் உற்பத்தி அதிகரிப்பதாலும் வெள்ளைப் பூச்சியால் ஏற்பட்ட பாதிப்புகளாலும் இலங்கையில் நுகர்வுக்கு வழங்கப்படும் தேங்காயின் அளவு குறைந்துள்ளது. இது தேங்காய் உற்பத்தித்திறன் சுமார் 50 வீதத்தால் குறைந்துள்ளதாகக் காணப்படுகிறது. மேலும், இந்தோனேஷியா (Indonesia), பிலிப்பைன்ஸ் (Philippines) போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் உலர் தேங்காய்க்கான தேவை குறைந்துள்ளதால் உலக சந்தையில் இந்த நாட்டில் காய்ந்த தேங்காய்க்கான தேவை அதிகரித்துள்ளது.கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் நிலவும் வறட்சியும் தேங்காய் விலை உயர்வுக்கு ஒரு காரணம். வறட்சி அதிகமாகவுள்ளதனால் தென்னையில் தேங்காய்களாக முற்றவிடாமல் அதிகளவான இளநீர் விற்பனையாகின்றன. இதே வேளை, வறட்சியின் காரணமாக விளைச்சல் குறைவடைந்துள்ளதனால் உற்பத்தியாகும் தேங்காயை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் .

மேலும், தேங்காய் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதித் தொழில் துறைக்குத் தேவையான தேங்காய் இருப்புகளை அவசரமாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நாடு பல பில்லியன் டொலர் வருவாயை இழக்க நேரிடும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் வருடாந்த தேங்காய் உற்பத்தி 2020 இல் 2,792 மில்லியன் தேங்காய்களாகவும் 2021 இல் 3,120 மில்லியன் தேங்காய்களாகவும் 2022 இல் 3,391 மில்லியன் தேங்காய்களாகவும் 2023 இல் 2,682 மில்லியன் தேங்காய்களாகவும் பதிவாகியுள்ளன. தேங்காய் விளைச்சல் குறைவதற்கு பல முக்கிய காரணிகள் பங்களித்துள்ளன.

இந்நாட்டின் வருடாந்த தேங்காய் உற்பத்தி 3,000 மில்லியன் கோடி. அதில் 60 தொடக்கம் 70 வீதம் உள்ளூர் பாவனைக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் மீதமுள்ள தொகை தொழிற்சாலைத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில், நாட்டின் வருடாந்த மொத்த தேங்காய் உற்பத்தி 3,000 மில்லியன்களாக இருந்தபோதிலும், கடந்த ஆண்டு அது 2,680 மில்லியன்களாகக் குறைந்துள்ளதாகவும் இந்த ஆண்டு தேங்காய் உற்பத்தி 2,400 முதல் 2,600 மில்லியன்களாகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றதாகவும் கூறப்படுகிறது. இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை 200 மில்லியன் தேங்காய் உற்பத்தி பற்றாக்குறை ஏற்படுமெனத் தெரிகிறது.

தேங்காயின் விலையுயர்வானது எதிர்காலத்தில் பொதி செய்யப்பட்ட உணவுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

பெரும்பாலான சமையல்களில் கறிகள் தேங்காய்ப் பாலைக்கொண்டு தயாரிக்கப்படுவதால் பாதிப்பை ஏற்படுத்தும் 60 ரூபா முதல் 80 ரூபா வரையில் இருந்த தேங்காயின் வழமையான விலை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. தேங்காய் தற்போது ரூ.150 முதல் 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

அதிகரித்துள்ள தேங்காய் விலையால் உணவுகளைத் தயார் செய்ய முடியாமல் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி வருவதாகவும் இதனால் உணவுப் பொதிகளை அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. அரிசி, மரக்கறி, மிளகாய், உளுந்து, எரிவாயு உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் கணிசமாக உயர்ந்துள்ள நிலையில், தேங்காய்களின் எதிர்பாராத விலையுயர்வும் ஏற்பட்டுள்ளது.

தேங்காய்களின் திடீர் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் நாட்களில் தேங்காய் எண்ணெயின் விலையும் உயருமென எதிர்பார்த்தனர். ஆனால், எதிர்பார்த்தபடி அதிகரித்துள்ளது. ஒரு லீற்றர் தேங்காயெண்ணெய், ரூ.750 முதல் ரூ1000 வரை விற்கப்படுகிறது.

இதனால், சந்தையில் தரம் குறைந்த எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தரம் குறைந்த பொருட் களை விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் அதிகார சபையிடம் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கட்டுப்பாட்டு விலைக்கு நாடு முழுவதும் தேங்காய்களை விநியோகிக்கும் திட்டம் அரசாங்கத்தின் தலையீட்டுடன் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன் மூலமே அதிகரித்துள்ள தேங்காய் விலைகளைக் குறைக்க முடியும். அதற்கமைவாக, தேங்காய்க்கான நிர்ணய விலையானது அமுலாகும் வகையில் 13 அங்குலத்துக்குத் அதிகமான தேங்காயை 70 ரூபாவுக்கும் 12 முதல் 13 அங்குலம் வரையான தேங்காயை 65 ரூபாவுக்கும் 12 அங்குலத்துக்கு குறைவான தேங்காயை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்யவேண்டுமென அதியுச்ச நிர்ணய விலையை நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவிக்கவேண்டும்

நாட்டின் உள்நாட்டு தேங்காய் உற்பத்தியை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் 3,600 மில்லியனாக அதிகரிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை தென்னை அபிவிருத்திச் சபை ஆரம்பித்துள்ளது.

தற்போது, ஓர் ஆண்டு தேங்காய் உற்பத்தி 3,000 மில்லியன்களாக உள்ளது. இதில் 1,700 மில்லியன் தேங்காய்கள் ஆண்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் 1,500 மில்லியன் தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இந்த நாட்டில் தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் நோக்கில் தென்னங்கன்றுகள் விநியோகம் உள்ளிட்ட புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்திச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

தேங்காயின் விலை உயர்வு காரணமாக வவுனியா சந்தையிலும் தேங்காய்க்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேங்காய்க்கான அதிகூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட் டுள்ளபோதிலும், குறித்த விலையில் தேங்காயைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேங்காய் அத்தியாவசியமான விற்பனைப் பொருளாக சந்தையில் உள்ளதால் காய்க்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது. தேங்காய் அவற்றின் அளவுக்கேற்ப 100 முதல் 250 ரூபா வரையில் வவுனியாவில் விற்பனை செய்யப்படுகின்றது.

தேங்காய்த் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து தம்புள்ளை மற்றும் யாழ்ப்பாணப் பகுதி களிலிருந்து வவுனியாவுக்கு தேங்காய் எடுத்து வந்து விற்பனை செய்யப்படுகின்றது. யாழ் குடாநாட்டில் தேங்காய்களின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தேங்காய்ப் பால், தேங்காய் சம்பல் போன்றவற்றால் தேங்காய் வீண்விரயமாகிறது என்று கைத்தொழில் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்திருந்தார். நாம் வீட்டில் தேங்காய் சாப்பிடுவதில் மிகவும் வீண் விரயம் செய்கிறோம். தேங்காய்ப் பாலாக, சம்பலாகப் பயன்படுத்துகிறோம். இந்த இரண்டு செயல்முறைகளிலும் கணிசமான அளவு தேங்காய் வீணாகிறது.

தேங்காய்ப் பாலை மாற்றக்கூடிய தயாரிப்புகளுக்கு முன்னுரிமையளித்து, அவற்றை மாற்றாகப் பயன்படுத்த முடிந்தால் மீதமுள்ள தேங்காய்களை ஏற்றுமதி செய்து நாட்டுக்கு டொலர்களை ஈட்ட முடியும்.

எதிர்வரும் காலங்களில் தேங்காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பல டொலர்களைக் கொண்டுவரப்போகின்றதென எதிர்பார்த்தாலும் வாயையும் வயிற்றையும் கட்டி வியர்வை சிந்தி பாடுபட்டு உற்பத்தி செய்யும் பொருட்களெல்லாம் கைக்கு எட்டினாலும் வாய்க்கு எட்டாத தூரத்துக்கு சென்றுவிடும்.

அத்துடன், தேங்காய் விலை அதிகரிப்பால் தமது அன்றாட உணவுத் தேவைகள் மற்றும் வீடுகளில் இடம்பெறும் விசேட தினங்களின் போது உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பாதிப்பை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், வவுனியா மாவட்டத்தின் முக்கிய சந்தைகளில் ஒன்றாகக் கருதப்படும் பொதுச் சந்தையில் இன்றைய விலை நிலைவரப்படி பெரிய தேங்காய் ஒன்று 150 ரூபா முதல் 300 ரூபா வரையும் நடுத்தரத் தேங்காய் ஒன்று 120 ரூபா முதல் 150ரூபா வரையும் சிறிய தேங்காயொன்று 100 ரூபா முதல் 120 ரூபாவரையும் தற்போது விற்பனையாகி வருகின்றது.

தேங்காய்களின் விலை அதிகரிப்பால் தேங்காய்களின் வரத்தும் வாடிக்கையா ளர்களின் வரத்தும் வெகுவாகக் குறைவடைந்து காணப்படுகின்றது. அரசாங்கம் அண்மையில் எடுத்த தீர்மானத்துக்கமைய நாடு முழுவதும் உள்ள சதொச விற்பனை நிலையங்களில் தேங்காய்கள் கட்டுப்பாட்டு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்களில் ஒருவருக்கு ஐந்து தேங்காய்கள் என்ற அடிப்படையில் தேங்காய்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

நாட்டில் தேங்காய்களின் விலை அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம், மக்கள்தொகை அதிகரிப்புடன் ஒப்பிடும்போது கடந்த 20 ஆண்டுகளில் தேங்காய் உற்பத்தி குறைந்து வருவதேயாகும். 2000 ஆம் ஆண்டளவில் தேங்காய் உற்பத்தி 3,000 மில்லியன்களாக இருந்தது. அப்போது நாட்டின் மக்கள் தொகை 18 மில்லியனாக இருந்தது.

இருப்பினும், 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகை 23 மில்லியனாக அதிகரித்திருந்தாலும் தேங்காய் உற்பத்தி அதிகரிக்கவில்லை. தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு தேங்காய் உற்பத்தி இல்லாததே தேங்காய் பற்றாக்குறைக்கு முக்கிய காரணியாகவும் உள்ளது.

இதற்கிடையில், தேங்காய் பற்றாக்குறைக்கு நீண்டகாலத் தீர்வாக இந்த ஆண்டு 3 மில்லியன் தென்னங்கன்றுகளை நடுவதற்கு தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் தேங்காய்களின் விலையுடன் ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டில் ஒரு தேங்காய் சந்தையில் 60 முதல் 70 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஒரு தேங்காயின் விலை சுமார் 100 ரூபாவாக இருந்தது.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு தேங்காயின் சராசரி சில்லறை விலை 80 - 120 ரூபாவாக இருந்தது.

இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு தேங்காயின் சில்லறை விலை 160 இலிருந்து 200 ரூபாவாக உயர்ந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் தற்காலத்தில் ஒரு தேங்காயின் சில்லறை விலை 160 இலிருந்து 250 ரூபாவாக உயர்ந்துள்ளது.

தற்போது வெளியிடப்பட்ட தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி சுமார் 700 மில்லியன் வரை குறைந்துள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் வருடாந்த தேங்காய் உற்பத்தி 2020 இல் 2,792 மில்லியன் தேங்காய்களாகவும் 2021 இல் 3,120 மில்லியன் தேங்காய்களாகவும் 2022 இல் 3,391 மில்லியன் தேங்காய்களாகவும் 2023 இல் 2,682 மில்லியன் தேங்காய்களாகவும் பதிவாகியுள்ளன.

தேங்காய் விளைச்சல் குறைவதற்கு பல முக்கிய காரணிகள் பங்களித்துள்ளன.

இதில் குறைக்கப்பட்ட உர பயன்பாடு, காட்டு விலங்குகளால் ஏற்படும் சேதம், வானிலை மாற்றங்கள் மற்றும் சமீபத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை நிலங்களை பிற திட்டங்களுக்கு விற்பனை செய்தல் ஆகியவை அடங்கும்.

தென்னை ஆராய்ச்சி நிறுவனம் (CRI) வழங்கிய தரவுகளின் அடிப்படையில், 2021 முதல் 2024 வரை 700 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்களின் விளைச்சல் குறைவடைந்துள்ளதாகவும் ஜனவரி முதல் ஏப்ரல் 2025 வரை சுமார் 200 மில்லியன் தேங்காய்களின் உற்பத்தி பற்றாக்குறை மேலும் ஏற்படுமென்றும் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறை ஏற்கனவே விலைவாசி உயர்வுக்கு வழிவகுத்ததுடன், வீட்டுச் செலவையும் பாதித்தது. மேலும் ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான மூலப்பொருட்களின் விநியோகத்தைப் பாதித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் தேங்காய் பொருட்கள் ஏற்றுமதி 708 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது. மேலும், நவம்பர் 2024 இல் நாடு 782 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 20% அதிகரிப்பைக் காட்டியது. ஆண்டு வருவாய் 850 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு ஆண்டு 17% வளர்ச்சியுடன் மிக உயர்ந்த வருமானத்தைக் குறிக்கிறது. துறையின் வருவாய் திறனையும் அது ஆதரிக்கும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்க இந்தத் துறையை நிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வருடாந்த தேசிய பயிர் உற்பத்தி (ANCP) தேங்காய் தொழில், முறைப்படுத்தப்பட்ட துறையில் 7,50,000 க்கும் அதிகமான நேரடி வேலைவாய்ப்புகளை வழங்குகிறது மற்றும் இன்னும் பல இலட்சக்கணக்கானோருக்கு மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்குகிறது. இது இலங்கை பொருளாதாரத்தின் உயிர்நாடியாகும்.

“தற்போதைய தேங்காய் பற்றாக்குறை வீடுகளுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் இரட்டை நெருக்கடியை ஏற்படுத்துகிறது.” “உடனடி மற்றும் தீர்க்கமான நடவடிக்கை இல்லாமல், இலங்கை உலக சந்தைகளில் அதன் போட்டித்தன்மையைக் குறைமதிப்புக்கு உட்படுத்துவதுடன் ஆயிரக்கணக்கானோரின் வாழ்வாதாரங்களையும் ஆபத்தில் ஆழ்த்தும்.



சிவகுமார் திவியா

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 06ஆம் திகதி, வியாழக்கிழமை

# சுமந்திரன் சுட்டிக்காட்டும் ஆபத்தை புரிந்துகொள்க!

''போர்க்காலத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பான சாட்சியங்களை சேகரிக்கும் பணிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த செயற்பாடுகளுக்கு தாங்கள் எதிரானவர்கள் என்ற அரசாங்கத்தின் கூற்றை முற்றுமுழுவதுமாக நிராகரிக்கிறோம்'' என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ள விடயம் எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

மேலும், உண்மையாக என்ன நடந்தது என்பதை அறிவதில் தமக்கு ஆர்வம் இல்லை அல்லது அதனை மூடிமறைக்க வேண்டும் என்ற தோரணையிலேயே இந்த புதிய அரசாங்கம் செயற்படுகிறது. உண்மையாக நல்லிணக்கம் உருவாக வேண்டுமென்றால் அது உண்மையின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட வேண்டும். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு தமிழ் மக்களுடைய அபிலாஷையை மூடி மறைப்பதாக இருக்கிறது. சர்வதேச ஈடுபாட்டுடனேயே உண்மையை கண்டறியும் பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள அவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

''உண்மையான நல்லிணக்கம் உருவாக வேண்டுமென்றால் அது உண்மையின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்படவேண்டும். உண்மையை மறைத்து எங்கேயும் எப்போதும் நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. புதிய அரசாங்கம் தங்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் ஆணை இருக்கிறது என்று கூறுகிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டு, வடக்கு - கிழக்கு மக்களுடைய மிகவும் முக்கிய கோரிக்கையாகவும் பொறுப்புக்கூறல் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்களை நிறைவேற்றி அதற்கான சாட்சியங்களை சேகரிக்கும் பணிகளும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தச் செயற்பாடுகளுக்கு தாங்கள் எதிரானவர் என்ற அரசாங்கத்தின் கூற்றை நாங்கள் முற்றுமுழுவதுமாக நிராகரிக்கிறோம்.

அரசாங்கத்தினுடைய இந்தச் செயற்பாடு தமிழ் மக்களுடைய அபிலாஷையை மூடி மறைப்பதாக இருக்கிறது. வடக்கு - கிழக்கு தமிழ் மக்களும் கூட இதனை செவிமடுக்க வேண்டும். மக்கள் கோரிக்கொண்டிருக்கும் உண்மையை கண்டறியும் விடயத்தைக்கூட நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். தேசிய நிறுவனங்களினூடாகவே அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறார்கள். உள்நாட்டு பொறிமுறை எதிலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை, அக்கறையில்லை என்று மக்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள். சர்வதேச ஈடுபாட்டுடனேயே உண்மையை கண்டறியும் பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கான பணிகள் இடம்பெற்றுவருகின்ற நிலையில் அதனை எதிர்ப்பதாக இந்த அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

போர்க் காலத்தில் இடம்பெற்ற அட்டூழியங்கள் தொடர்பில் உண்மையை கண்டறியும் பொறிமுறையின் அடிப்படையில் உண்மைகளை சேகரிக்கும் முடிவை நிராகரிப்பதாக இந்த அரசாங்கம் அறிவித்துள்ளதை மக்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் இந்தப் போக்கை கண்டிக்கிறோம். மக்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமெனக் கூறுகிறோம். தொடர்ச்சியாக இவர்களுக்கு வாக்களித்து மக்கள் அவர்களின் அடிப்படை அபிலாஷைகளை நீர்த்துப்போகச் செய்துவிடக்கூடாது'' என்றும் குறிப்பிட்டுள்ளார் சுமந்திரன் எம்.பி.

தமிழர்கள் விடயத்தில் தற்போதைய ஆட்சியாளர்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதை சுருக்கமாகக் கூறியிருக்கிறார் சுமந்திரன் எம்.பி.

இலங்கையில் யுத்தத்தை ஒட்டிய காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பான சாட்சியங்கள், ஆதாரங்கள், சான்றுகள் போன்றவற்றை அழிய விடாமல் பாதுகாப்பதற்காக சாட்சிய சேகரிப்பு மற்றும் பதிவுப் பொறிமுறை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தற்போது முன்னெடுத்து வருகின்றது. அதை நிராகரிப்பதாக தேசிய மக்கள் சக்தி அரசு இப்போது ஜெனிவாவில் வைத்து அறிவித்துள்ளமை கடந்த கால உண்மைகளை அம்பலப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிரான திட்டமிட்ட சதிச் செயல் - நயவஞ்சக நாடகம் என்பதை தமிழர் தரப்பு நன்கு அறியும். அதனையே சுமந்திரன் நேற்றுமுன்தினம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தக் குற்றங்கள், கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்தும் இலங்கையில் எதுவுமே நடக்கவில்லை. நீதியை நிலைநாட்டவோ உண்மைகளைக் கண்டறியவோ பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தவோ எதுவும் இங்கு நடக்காத சூழ்நிலையிலேயே இருக்கின்ற ஆதாரங்கள், ஆவணங்களை அழியவிடாமல் சேமிப்பதற்கான - பதிவதற்கான - தரவு பண்ணுவதற்கான - நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை முன்னெடுத்திருக்கின்றது.

அதை நிராகரிக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் விஷமத்தனமான போக்கு, தமிழர்களின் இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட கடந்த கால விடயங்களில் உண்மைகளை மூடி மறைத்து, அப்படியே அவற்றை அழித்துவிட எத்தனிக்கும் கொழும்பின் திட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது. சுமந்திரன் கூறுவதுபோல இது இலேசான விடயமாக மெத்தனத்துடன் கருதிவிட முடியாது.

தமிழர்களுக்கு எதிரான இத்தகைய கபடத்திட்டத்தை முன்வைத்திருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத சக்தியான தேசிய மக்கள் சக்தி, இந்த நயவஞ்சகத் திட்டத்தை ஒருபுறம் முன்னெடுத்துக் கொண்டு, மறுபுறம் ஈழத் தமிழர்களின் ஆணை பெற்ற கட்சியாக தன்னைக் காட்ட முனைவதற்கு தமிழர்கள் இடமளிக்கலாமா? தேசிய மக்கள் சக்தியின் - அந்த உரித்துக் கோரலுக்கு எதிரான நல்ல பதிலடியை இந்த உள்ளூராட்சித் தேர்தல்மூலம் தமிழர்கள் உறுதியாக வழங்க வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் தங்களை நடுநிலையானவர்களாகக் காட்டிக்கொண்ட இந்த ஆட்சியாளர்கள், கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களைவிட தமிழர் விடயத்தில் திமிர்த்தனமாக நடக்க ஆரம்பித்துள்ளதை கண்கூடாகக் காண முடிகிறது. ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி பெயரை மாற்றிக்கொண்டு தேசிய மக்கள் சக்தியாக வந்தாலும் 'பசுந்தோல் போர்த்திய புலியாக' அதன் சுயரூபம் வெளிவரத் தொடங்கியுள்ளது. இந்த ஆபத்தை தமிழர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1665 – பிரித்தானிய அரச கழகத்தின் மெய்யியல் இதழின் முதல் இதழ் வெளியிடப்பட்டது.
- 1790 – மதுரை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 1866 – கண்டி மாநகர சபைக்கான முதலாவது தேர்தல் இடம்பெற்றது.
- 1902 – ரியல் மாட்ரிட் உதைபந்தாட்டக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1967 – திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.

# வட்டாரக் கட்சிகளின் போலி கோஷமும் சி.வி.கேயின் அவசரமும்

## - புதிய கூட்டணியின் பின்னணி சங்கதிகள் -



*கருணாகரன்*

தமிழ்க் கட்சிகளின் புதிய கூட்டு ஒன்று உருவாகுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கான சந்திப்புகளும் பேச்சுகளும் தொடருகின்றன. ஆரம்பத்தில் பேச்சுகளில் பங்கேற்ற ஐங்கரநேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் இந்தக் கூட்டில் இணைவதற்குப் பின்வாங்குவதாகச் செய்திகள் வந்துள்ளன. இந்த இரண்டு கட்சிகளுக்குள்ளும் குழப்பங்கள் நீடிப்பதால்தான் அவற்றினால் தீர்மானத்தை எடுக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு அணிகளின் குழப்பத்துக்கும் புலம்பெயர் தமிழ்த்தரப்புகளின் அழுத்தப் பின்னணி இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் அதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

இதேவேளை, தமிழரசுக் கட்சியிலிருந்து அண்மையில் பிரிந்த சரவணபவன் + தவராசா அணியும் தடுமாறுகிறது. அந்த அணியிலுள்ள சரவணபவன், 'ஒட்டுக்குழுக்களுடன் கூட்டு வைக்க முடியாது' என்று இந்த அணியைப் பார்த்துச் சொல்கிறார். என்னவொரு ஞானோதயம்! மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாம்பழம், மைத்ரிபால சிறிசேனவுக்கு கேக், ரணில் விக்கிரமசிங்கவுக்கு அல்வா என்று கொடுத்துக் கொடுத்துக் குளிராபிஷேகம் செய்கின்ற சரவணபவனுக்குத் தமிழ்த் தேசியம், தலைவர் பிரபாகரன் போன்ற சொற்களெல்லாம், தன்னுடைய கொழும்பு அரசியல் உறவையும் அதில் பரிமாறப்படும் இரகசிய முத்தங்களையும் மறைத்துக் கொள்வதற்கான ஒரு அழகிய திரைதான்.

விடுதலைப் புலிகளை முன்னிறுத்தி, அப்படித் தூய்மைவாதம் பேசுகின்ற இந்தத் தரப்புகள் அனைத்தும் ஏன் புலிகளுடைய கனவுகளுக்காகவும் நம்பிக்கைக்காகவும் ஒன்றிணைய முடியாமலிருக்கிறது? ஆபத்தின் விளிம்பிலிருக்கும் தமிழ்த் தேசியத்தை ஒன்றிணைந்து பாதுகாக்க முடியாமலிருப்பது ஏன்?

காரணம், வேறொன்றுமில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்றிரண்டு வட்டாரங்களுக்கு அப்பால், இவற்றுக்கு அரசியற் களமுமில்லை. அடையாளமுமில்லை. கூட்டுக்குள் நிற்பதானால் ஒரு சமதள வலுவிருக்க வேண்டும். இல்லையென்றால், தங்களுடைய கோரிக்கைகளும் தமக்கான இடமும் குறைவாக இருக்கும் என இவை பதற்றமடைகின்றன. இதனால்தான் இந்தத் தடுமாற்றங்கள். அதை மறைத்துக் கொள்வதற்காகவே இந்தக் கூட்டணியைப் பற்றிய சில குறை கூறுதல்களும் தம்மைப்பற்றிய நியாயப்படுத்தல்களும். இவையெல்லாம் காலம் கடந்தவை. தற்போதைய அரசியல் நிலைவரமும் மக்களின் உளநிலையும் மாற்றமடைந்து எங்கேயோ போய்விட்டது. இதைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகின்றன இந்த மூன்று அணிகளும்.

இந்த மூன்று அணிகளையும் தவிர்த்துப் பார்த்தால் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், சமத்துவக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியவை பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது. மேலும் சில அணிகள் இந்தக் கூட்டில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுவதாக இந்த அணியில் உள்ள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் கிழக்கில் உள்ள அரசியற் தரப்புகளும் உள்ளடங்குமா என்று தெரியவில்லை. கிழக்கைத் தவிர்த்து, வடக்குக்கு மட்டும்தானா இந்தக் கூட்டணி என்றால், அதைக் குறித்து நாம் கேள்வி எழுப்ப வேண்டும்.

ஏனென்றால், வடக்கின் சூழல், நிலைமைகளுக்கு ஏற்ப, வடக்கிலுள்ள தரப்புகள் சிந்திப்பதைப்போல, செயற்படுகின்ற மாதிரி, கிழக்கை மையப்படுத்திச் செயற்படுகின்ற அமைப்புகளும் உண்டு. அவை கிழக்குப் பிரதேசவாதத்தை விட்டு தமிழ்ச் சமூகம், தமிழ் பேசும் தரப்புகள் என்று சிந்திக்கக் கூடியவையாக இருந்தால், நிச்சயமாக அவற்றையும் இணைத்துச் செயற்படுவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அது அவசியமானது. அப்பொழுதுதான் இந்தக் கூட்டு, இந்த அணி பலமுடையதாகவும் அர்த்தமுடையதாகவும் இருக்கும்.

ஒரு புதிய அரசியற் கூட்டானது ஏற்கனவே உள்ள அரசியல் கூட்டுகள் அல்லது தரப்புகளையும் விட புதிய ஒன்றாக இருக்க வேண்டும். அரசியல் உள்ளடக்கம் (Political Content), புதிய அரசியலை வடிவமாக்கும் செயற்பாட்டு முறைமை (The operating system that shapes the new politics) ஜனநாயகப்பண்பு (Democracy) போன்றவற்றில் அது முன்னகர்ந்திருப்பது அவசியம். ஏற்கனவே உள்ள அரசியற் கூட்டுகள் அல்லது தரப்புகளின் போதாமையினால் – குறைபாட்டினால் – தானே புதிய கூட்டு – புதிய அணி – உருவாகிறது என்றால், அதற்குரிய பண்பும் பாங்கும் வீரியமும் வினைத்திறனும் இலட்சியமும் அதை அடைவதற்கான வழிமுறையும் அர்ப்பணிப்பும் அதற்கிருக்க வேண்டும்.

ஆகவே இந்தக் கூட்டணி தனியே தேர்தலை மையப்படுத்திய கூட்டு என்றில்லாமல், சமகால – எதிர்கால அரசியலை முன்னெடுப்பதற்கான கூட்டாக மாற்றமடைவது – வளர்ச்சியடைவது – அவசியமாகும். இல்லையென்றால், இந்தக் கூட்டினால் பயனில்லை? எதற்காக இந்தக் கூட்டு?

அரசியற் கூட்டு தேர்தலையும் எதிர்கொள்கிறது. தேர்தலுக்கு அப்பாலும் அதனுடைய பணிகள் உள்ளன. அது உலகளாவிய அளவில் தமிழ் புலம்பெயர்ந்தோரையும் உள்ளடக்கி விரிவுகொள்ள வேண்டும். இதற்குரிய அடித்தளத்தை அமைப்பது அவசியம். அந்த அடித்தளத்தில் ஒரு ஆறு மாதகாலம் அர்ப்பணிப்போடு வேலை செய்தால், மக்களுக்கு நம்பிக்கை உருவாகும். அதற்கு முன்பு, அடுத்த மாதங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வந்து காலடியில் நிற்கிறதே என்றால், ஆம், அதையும் எதிர்கொள்ளுங்கள். தொடர்ந்து அரசியல் சமூகப் பணிகளையும் முன்னெடுங்கள் என்றே இங்கே வலியுறுத்தப்படுகிறது. இதை மக்கள் உணரவும் ஏற்கவும் வைக்க வேண்டும்.

இந்தக் கூட்டில் இருக்கும் தரப்புகள் ஒரு காலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அனுபவத்தைக் கொண்டவை. அதாவது செயற்பாட்டு அரசியற் பாரம்பரியத்தை உடையவை. இவற்றின் தலைவர்களுக்கு 40 ஆண்டுகளுக்கும் மேலான அரசியல் வரலாறும் பங்களிப்பும் உண்டு. அதேவேளை இவர்களின் மீது விமர்சனங்களும் தாராளமாக உண்டு. இதே தன்மையும் இதையொத்த வரலாற்றையும் கொண்டதே ஜே.வி.பியும். அது தன்னை NPP யாக மாற்றியதால், அதற்கொரு புதிய முகமாக அநுரவை முன்னிறுத்தியதால் இன்று ஆட்சியைப் பிடித்திருக்கிறது,அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறது. இதை இந்த அணி பாடமாக – முன்மாதிரியாகக் கொள்வது நல்லது.

இதற்கிடையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அதிரடியாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றின் தலைவர்களிடம் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள இயங்க வைக்க வேண்டும்' என்று கடிதம் எழுதியிருக்கிறார். 'அதுதான் தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலத்துக்குப் பாதுகாப்பானது' என்று வேறு விளக்கமும் அளித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என ஏனைய கட்சிகள் வெளியேறக் காரணமாக இருந்தது தமிழரசுக் கட்சியே. அதனுடைய பிடிவாதங்களும் மேலாதிக்கச் செயற்பாடுகளும் கூட்டமைப்பின் உடைவுக்குக் காரணமாகின.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் கொடுத்தபோது கூட தான் தனித்தே போட்டியிடப்போவதாக அறிவித்தது தமிழரசுக் கட்சி. 'அப்படிக் கடுமையானதொரு தீர்மானத்தை எடுக்க வேண்டாம். அது தமிழ்த் தேசிய அரசியலைப் பலவீனப்படுத்தும்' என்று பங்காளிக் கட்சிகள் கெஞ்சிக் கேட்டன. ஆனாலும் அதைத் தமிழரசுக் கட்சி கேட்கவில்லை. தனித்தே தன்னுடைய வேட்புமனுக்களைக் கொடுத்தது.

'ஆயிரம் பிரச்சினைகளின் மத்தியிலும் கூட்டமைப்பைச் சிதைய விடக்கூடாது' என்று இறுதி மூச்சுவரையில் தாக்குப்பிடித்த பங்காளிக் கட்சிகள், வேறு வழியின்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தம்மைப் பிரகடனப்படுத்தின. இந்தப் பெயரிலேயே அவை ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் எதிர்கொண்டன. இதனால் அவற்றுக்குச் சேதமும் ஏற்பட்டது.

இருந்தும் பின்வாங்காமல், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தன்னைப் பலப்படுத்துவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. கூடவே தமிழ் அரசியற் பரப்பில் ஏற்பட்டிருக்கும் அரசியல், சமூகப் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதற்குமாக ஏனைய தரப்புகளோடு பேசி வருகிறது. இதில் முதற்கட்ட உடன்பாட்டுக்கு அது வந்துள்ள நிலையில்தான் சிவஞானத்தின் அவசரக் கடிதம் வந்துள்ளது.

சிவஞானத்தின் கடிதத்துக்கு நல்லதொரு பதிலை சித்தார்த்தன் அளித்திருக்கிறார். அதில் அவர் மேற்சொன்ன விடயங்களையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். மட்டுமல்ல, தமிழரசுக்கட்சி இதையெல்லாம் புரிந்து கொண்டு பேச வந்தால், சேர்ந்து செயற்பட வந்தால், இணைந்து கொள்வதில் பிரச்சினை இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

**சிவஞானத்தின் இந்த அவசரத்துக்கு என்ன காரணம்?**

***01. தன்னை விட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமடைந்து விடும் என்ற தமிழரசுக் கட்சியினுடைய அச்சத்தின் வெளிப்பாடா?***

இருக்கலாம். ஏனென்றால், வரவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கணிசமான வாக்குகளை எப்படியோ NPP கொண்டுபோகத்தான் போகிறது. மிஞ்சும் வாக்குகளைத்தான் தமிழ்த்தரப்புகள் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதில் இப்போதுள்ள நிலையில் வடக்கில் மூன்று தரப்புகளும் கிழக்கில் இரண்டு தரப்பும் உள்ளன. வடக்கில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அணி ஆகிய மூன்றும் உள்ளன. கிழக்கில் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணியும். இதை விட இப்போதுள்ள நிலையில் கிழக்கை மையப்படுத்தி கட்சிகளும் தனியாக உள்ளன.

இதில் தமிழரசுக் கட்சிக்கான இடம் எப்படி இருக்கும்? என்ற கேள்வி அதற்குள் எழுந்திருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வெற்றி கிட்டியிருந்தாலும் அதற்குப் பிறகான களச்சூழல் சற்று மாற்றமடைந்துள்ளது. இந்த நிலையில்தான் தமிழரசுக் கட்சியைத் தனித்து விட்டு விட்டு ஏனைய கட்சிகளை உள்ளீர்த்து தன்னைப் பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதன்படி தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை விட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணிக்கு சில இடங்களில் வெற்றி வாய்ப்புக் கிட்டினால், அது மாகாண சபைத் தேர்தலில் பெரும் மாற்றத்தை உண்டாக்கும் என்பதால் அவசர அவசரமாக ஒரு மாற்று உபாயத்தை வகுத்து, தனக்குச் சாதகமாக்குவதற்கு தமிழரசுக் கட்சி முயற்சிக்கிறது. இந்த முயற்சிக்கு சுமந்திரனோ சிறிதரனோ முன்னிலைப் பாத்திரத்தை வகிக்க முடியாது. அவர்கள் இருவரையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திரும்பியும் பாராது. ஆகவேதான் சிவஞானத்தின் மூலமாக அது இந்தக் காயை நகர்த்தப் பார்க்கிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நக்கல் நமசிவாயம்

நாட்டில நடக்கிற விஷயங்களை பார்க்கும்போது முஸ்லிம் மக்களை நிம்மதியா இருக்க விடமாட்டாங்க போல...



## தவக்கால சிந்தனை

### என்னை பின்பற்ற விரும்பும்....



இன்றைய நற்செய்தியின் இரத்தின சுருக்கம் ''என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னை பின்பற்றட்டும்" (மத்தேயூ 16.24) என்பதே மனமாற்றத்தின் காலம் என அழைக்கப்படும் இந்த நாளில் முதல் எடுத்துரைப்பில் கூறுவதுபோல மோசே தம் மக்களின் முன் சாவையும் வாழ்வையும் முன்வைக்கின்றார். கடவுளின் மீதுள்ள பேரன்பே எங்களை வாழ்வை தேர்ந்தெடுக்க வழிவகுக்கும். இதை சாத்தியப்படுத்த தேவை, நாம் எம் உள்ளங்களில் கடவுளை மையப்படுத்துவதே ஆகும். இன்று, சுயநலம் கலைந்தால் உண்மையான வாழ்வு மலரும்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மாசி மாதம் 22ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

**ரிஷபம்** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள். சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**மிதுனம்** தேவையற்ற அலைச்சல்களால் விரக்தியடைவீர்கள். உங்கள் பணம், பொருள் நஷ்டமேற்படலாம்.

**கடகம்** போட்டிப் பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள்.தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

**சிம்மம்** தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

**கன்னி** உடல் உழைப்பு அதிகமாகத் தேவைப்படும் நாள். எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளாதீர்கள்.

**துலாம்** திட்டமிட்ட காரியத்தை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளைச் சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

**விருச்சிகம்** உங்கள் பங்குதாரர்களால் அதிக இலாபங்களை அடைவீர்கள். காதலில் வெற்றி வாகை சூடுவீர்கள்.

**தனுசு** நண்பர்களோடு சந்தோஷமாக விருதுண்ணுவீர்கள். நீண்ட நாள் கடன் இன்று தீரப்போகிறது.

**மகரம்** உங்கள் மனக்குறையை மற்றவர்களிடம் கொட்டிவிடுவீர்கள். பிள்ளைகளால் மனக்கவலை அடைவீர்கள்.

**கும்பம்** வீடு, வாகனங்களால் சற்றுச் செலவுகள் அல்லது தொல்லைகள் உண்டு. ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

**மீனம்** இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள். எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

| | |
|---|---|
| **திதி:** | சப்தமி மு.ப.10.51 வரை பின் அட்டமி |
| **நட்சத்திரம்:** | ரோஹிணி பி.இ.12.05 வரை பின் மிருகசீரிடம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை:** | தெற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்:** | காலை- 9.21 – 12.21 மணி வரை மாலை- 4.21 – 6.21 மணி வரை |
| **ராகு காலம்:** | 1.51 – 3.21 மணி வரை |
| **எமகண்டம் :** | 6.21 - 7.51 மணி வரை |
| **குளிகை :** | 9.21 - 10.51 மணி வரை |
| **சந்திராஷ்டமம்:** | துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

இன்று பின்னிரவு 12.05 மணி வரை அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

இன்று பின்னிரவு 12.05 மணிக்கு மேல் பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# இலங்கை சுங்கத்தில் காலத்துக்கேற்றவாறு கட்டமைப்பில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்

## சுங்க உயரதிகாரிகளுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி தெரிவிப்பு



காலத்துக்கேற்ற நிறுவனக் கட்டமைப்பை உருவாக்க இலங்கை சுங்கத்துக்குள் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படுமென்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

2025 வரவு - செலவுத் திட்டம் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கை சுங்கத்தின் உயரதிகாரிகளுடன் நேற்று (05) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சுங்கத்தின் செயற்றிறனின்மை, மோசடி, ஊழல் மற்றும் பொதுமக்களிடையே காணப்படும் அதிருப்தி குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதற்குத் தீர்வாக, திணைக்களச் செயற்பாடுகளை விரைவுபடுத்த புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவைகளை சிறப்பாக வழங்குவதற்கான திட்டங்கள் குறித்தும் கவனஞ்செலுத்தப்பட்டது.

திணைக்களத்துக்கான புதிய மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கை சுங்கத்தில் காணப்படும் முறைகேடுகளை அகற்ற கடுமையான சட்டங்களை வகுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிக ளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மனிதவள முகாமைத்துவம், புதிய ஆட்சேர்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை துரிதப்படுத்துவது குறித்தும் இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த வருமான இலக்குகளைப் பாராட்டியதுடன், இந்த வருட வருமான இலக்கை அடைய சுங்கத் திணைக்களம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனஞ்செலுத்தப்பட்டது.

# மீனவர் பிரச்சினையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்த சீனா முயற்சி

## அனுமதிக்க முடியாதென்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



மீனவர் பிரச்சினையை வைத்துக்கொண்டு எமக்கும் இந்தியாவுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகவும் இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோமெனவும் தெரிவித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்த விடயத்தில் சீனா மூக்கை நுழைப்பதை அனுமதிக்க முடியாதென்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.அதன்போது செல்வம் எம்.பி. மேலும் கூறுகையில்,

நாட்டில் அந்நிய செலாவணியை ஈட்டும் தொழிலாக கடற்றொழில் இருக்கின்றது. இந்தக் கடற்றொழில் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமைக்கான காரணங்களை நாங்கள் ஆராய வேண்டும். நல்ல விடயங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளன. எண்ணெய் மானியம், கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளையும் கவனத்திலெடுக்க வேண்டும் என்ற சிந்தனை அரசாங்கத்திடம் உள்ளது. எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களை நம்பியே மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த விடயத்தில் நீங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

போர் காலத்திலும் சரி, இப்போதும் சரி எமது மீனவர்கள் பின்நோக்கிய நிலைமையிலேயே இருக்கின்றனர். அவர்களின் குடும்ப நிலை மிக மோசமாக இருக்கின்றது. பொதுவாக இந்திய இழுவைப் படகுகள், தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்ட படகுகளின் பிரச்சினை பெரும் பிரச்சினைகளாக இருக்கின்றன. இந்த மீனவர்கள் இழக்கும் வலைகளுக்கான மற்றும் உடைமைகளுக்கான இழப்பீடுகள் உள்ளிட்டவற்றுக்கான காப்புறுதி வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இதன்படி அந்தக் காப்புறுதிகளை வழங்கும் வழிகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை மீனவர்களுடன் நாங்கள் பேசும்போது, இந்திய டோலர் படகுகளின் வருகை குறையுமாக இருந்தால் அதற்கான இந்தியா மற்றும் தமிழ் நாட்டுடன் பகைக்காமல் மாற்றுத் திட்டத்தை வழங்குவதாகக் கூறினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக பிரதமராக மன்மோங் சிங் இருந்தபோது ஆழ் கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தினால் பிரச்சினை தீரும் என்று நாங்கள் அவரிடம் கூறினோம். இந்நிலையில், தமிழ்நாட்டு முதலமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரைக் கேட்கின்றோம். டில்லி அரசாங்கத்துடனும் பேசுவோம். அதற்காக நாங்களும் வருகின்றோம். இந்திய மீனவர்கள் எவ்வாறு வரவேண்டுமென்ற திட்டத்தை எமது மீனவர்கள் வகுப்பர்.

இந்திய மீனவர்களின் வருகையால் எமது மீனவர்கள் வலைகளை இழந்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்தவேண்டுமாயின் தமிழ்நாட்டு அரசு மற்றும் மத்திய அரசுடன் நாங்கள் பேச வேண்டும். அதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்யுங்கள். நாங்கள் நியாயமான விடயங்களை முன்வைப்போம்.

இதேவேளை, இந்திய இழுவைப் படகை வைத்துக்கொண்டு இந்தியாவுடன் நாம் முரண்பட வேண்டுமென்ற சிந்தனை ஏற்படுத்தப்படுகின்றது. அதற்கு ஒருபோதும் நாம் அனுமதிக்க மாட்டோம். இதில் சீனா மூக்கை நுழைக்கின்றது. இவ்வாறு மூக்கை நுழைப்பதால் அவர்களுக்கு என்ன இலாபம்? சீனாவின் ஆக்கிரமிப்பென்பது நிலங்களைக் கைப்பற்றுவதும் வளங்களைப் பயன்படுத்துவதாகவும் உள்ளன. எனினும், சீனாவின் எந்த நடவடிக்கைகளையும் அனுமதிக்க முடியாது. இந்தியா 35 கிலோ மீற்றர் தூரத்தில்தான் இருக்கின்றது. இப்போது படகுச் சேவையை நடத்தவும் பாதையை நிர்மாணிக்கவும் இந்தியா முயல்கின்றது. இதனால் இந்தியாவை மீறி இன்னுமொரு நாடு மூக்கை நுழைப்பதற்கு அனுமதிக்க முடியாது. நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம்'' - என்றார்.




**நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸல்மான் பின் அள்ளபிய்யு (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ஒருவர் நோன்பு துறந்தால் பேரீச்சம் பழத்தைக்கொண்டு நோன்பு துறக்கட்டும். பேரீச்சம் பழம் அவரிடம் இல்லையென்றால் தண்ணீரைக்கொண்டு நோன்பு துறக்கட்டும். நிச்சயமாக அது பரிசுத்தப்படுத்தக்கூடியதாகும்**
**(நூல், திர்மிதி)**


**எனவே, நோன்பு துறப்பதை விரைவுபடுத்தும் வகையில் பேரீச்சம்பழம் மற்றும் தண்ணீரைக்கொண்டு நோன்பு துறப்பதானது மிகவும் ஏற்றதாகும். அவையே சுத்தமாக்கக்கூடியதாகவும் இருக்கின்றன. இவை கிடைக்காத பட்சத்தில் வேறு ஆகுமான பானம் மற்றும் உணவைக்கொண்டு நோன்பைத் துறக்கலாம். அத்துடன், நோன்பு துறப்பதை தாமதிக்காமல் விரைவுபடுத்துவதே நபிவழியாகும்.**

**(தொழுகை நேரங்கள்)**
**(05ஆம் திகதி முதல் 09ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.06 |
| சூரிய உதயம் | - | 6.22 |
| ழுஹர் | - | 12.23 |
| அஸர் | - | 3.41 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |

# தென்னக்கோனின் கைது உத்தரவுக்கு முன்னர் முன்னாள் அமைச்சரொருவர் நடத்திய கூட்டம்

## சூழ்ச்சியாவென சாணக்கியன் எம்.பி. சந்தேகம்



முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்யுமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் முன்னாள் அமைச்சர் ஒருவரின் வர்த்தக மையமொன்றில் கூட்டமொன்று நடந்துள்ள நிலையில், அந்தக் கூட்டத்தில் ஏதேனும் சூழ்ச்சித் திட்டமிடப்பட்டதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்யுமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் கடந்த அரசாங்கத்தில் இருந்த பிரபல அமைச்சர் ஒருவரின் வர்த்தக மையத்தில் கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்டவர்கள் தொடர்பில் பார்த்தால் அது பிரச்சினைக்குரியதே.

குறித்த கூட்டத்தில் இராணுவ புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த சூலாகொடிதுவக்கு, கொழும்பு குற்றவியல் பிரிவில் இருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் ஆகியோர் இருந்துள்ளனர். இந்த கூட்டத்துக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் வராமையினால் அவரின் சகா இனியபாரதியை அனுப்பியுள்ளார். இனிய பாரதி ஹில்டன் ஹோட்டலில் இருந்துள்ளார். அவரின் வாகனத்தை சுதா என்பவர் செலுத்தியுள்ளார். இங்கு என்ன சூழ்ச்சி செய்யப்பட்டது என்று தெரியவில்லை. இது தொடர்பில் உங்களுக்கு எதுவும் தெரியுமா? இனிய பாரதி என்பவர் கடந்த காலங்களில் பல்வேறு கொலைகளுடன் தொடர்புடையவர். பிள்ளையான் தொடர்பிலும் பல தகவல்கள் உள்ளன.நீங்கள் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக கூறுகின்றீர்கள். ஆனால் கணேமுல்லை சஞ்சீவவை கொன்ற பெண்ணை இன்னும் தேடுகின்றீர்கள். முன்னாள் பொலிஸ்மா அதிபரையும் தேட முடியவில்லை. உங்களுக்குப் பொறுப்பு உள்ளது. பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை உள்ளது.குறித்த கூட்டத்தில் என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றார்.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்; பொலிஸ் அதிகாரிக்கு கொலை மிரட்டல்

கொட்டாஞ்சேனையில் கடந்த மாதம் 21ஆம் திகதி தமிழர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொலை மிரட்டல் விடுத்த சந்தேகநபர்களை உடன் கைதுசெய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'மோதர நிபுண' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒரு நபரால் இந்தக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொட்டாஞ்சேனை, கல்பொத்த சந்தியில் அமைந்துள்ள ஒரு வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் கடந்த பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேநாளில் தப்பியோடிய இரண்டு துப்பாக்கிதாரிகளையும் கைதுசெய்ததுடன், துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியையும் பொலிஸார் மீட்டனர்.

சந்தேகநபர்களிடம் பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதன்போது, சந்தேகபர்கள் இருவரும் பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டில் இருவரும் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் ஜனவரி 22ஆம் திகதி அதிகாலையில் நடந்தது. அதன் பிறகு சிறிது நேரத்திலேயே கொட்டாஞ்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி கோசல லியனாராச்சிக்கு உள்ளூர் தொலைபேசி எண்ணிலிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மன்னார் - முல்லைத்தீவு மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவுகளை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பம்

## அமைச்சர் அபேரத்ன தெரிவிப்பு



மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தீயணைப்புப் பிரிவுகளை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபேரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (05) உரையாற்றுகை யிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

அமைச்சரிடம் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கையை முன்வைத்து கூறுகையில்,

''முல்லைத்தீவு, மன்னார் பிரதேசங்களில் தீயணைப்புப் படை இல்லாமல் இருக்கின்றது. முல்லைத்தீவு நிலப்பரப்பு பெரிய மாவட்டமாக இருக்கின்ற நிலையில், அங்குள்ள மக்கள் தீயால் பாதிக்கப்படுகின்றபோது அல்லது கடைத் தொகுதிகள் எரியும்போது யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவிலிருந்தே தீயணைப்பு வாகனங்கள் செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு செல்வதற்கிடையில் அங்கிருந்த உடைமைகள் அழியும் நிலைமை உள்ளது. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு படையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த அரசாங்கத்திடம் முன்வைத்திருந்தபோதும் இன்னும் அது நடக்கவில்லை. அதனால் புதிய அரசாங்கத்திடம் அந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் பல கடைகள் தீக்கிரையான பின்னரே வவுனியாவிலிருந்து தீயணைப்புப் படை வருகின்றது. இந்த மாவட்டத்திலும் தீயணைப்புப் படை இல்லாமையால் அங்குள்ள மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் குறித்த மாவட்டங்கள் தொடர்பில் கவனஞ்செலுத்தவேண்டுமென்று கோருகின்றோம் - என்றார்.

இதற்குப் பதிலளித்த பொதுநிர்வாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபேரத்ன,

''அடைக்கலநாதன் முன்வைத்த விடயம் சரியானதே. மன்னாரில் மட்டுமன்றி, நாட்டில் இன்னும் பல பிரதேசங்களில் நிலவும் பிரச்சினையாக இது உள்ளது. அவர் முன்வைத்துள்ள பிரச்சினை தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். உள்ளூராட்சி நிறுவனங்களில் தீயணைப்புக்காக மத்திய அரசாங்கத்தால் நிதி வழங்குமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில், தேவையான உபகரணங்கள் கொரிய அரசாங்கத்தால் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன், முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் கரைதுறைப்பற்று பிரதேச சபை அதிகார பிரதேசம் மற்றும் மன்னார் நகரசபை அதிகார பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் தீயணைப்புப் பிரிவை அமைப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் 60.5 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வட மாகாண செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கூடிய விரைவில் அவை அமைக்கப்படும்''- என்றார்.

# ஜெரோம் பெர்னாண்டோவுக்கான வெளிநாட்டுப் பயணத்தடை நீக்கம்

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தடை நீக்கப்பட்டுள்ளது.

ஜெரோம் பெர்னாண்டோவுக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று (05) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பயணத் தடை நீக்கப்பட்டது.

மதங்களுக்கிடையே வெறுப்பைத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த ஜெரோம் பெர்னாண்டோவுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அவரது பிரசாரக் காணொளியொன்று சமூக ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டதைத் தொடர்ந்து, ஜெரோம் பெர்னாண்டோ 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி கைதுசெய்யப்பட்டார். கடந்த வருடம் அவர் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும் வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (05.03.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.7985 | 189.0167 |
| கனேடியன் டொலர் | 200.1948 | 208.7466 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.2065 | 41.7640 |
| யூரோ | 306.7773 | 319.4218 |
| ஜப்பான் யென் | 1.9322 | 2.0079 |
| சிங்கப்பூர் டொலர் | 215.2786 | 225.1240 |
| ஸ்ரேலிங் பவுன் | 370.1620 | 384.1527 |
| சுவிஸ் பிராங்க் | 323.6878 | 338.9617 |
| ஐ.அ. டொலர் | 290.9511 | 299.5180 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.2270 |
| குவைட் | குவைட் தினார் | 956.3809 |
| ஓமான் | ஓமான் றியால் | 766.7990 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.9949 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7132 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.3763 |

# வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சுரண்டும் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்துக! இல்லையேல் மக்கள் போராட்டம் வெடிக்கும்

## எச்சரிக்கிறார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் கடலோர மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித்தல் அல்லது மீன்வளம் தொடர்பான தொழிற்றுறையையே நம்பியுள்ளதாகவும் அதுவே அவர்கள் அறிந்த ஒரே வாழ்வாதார தொழிலெனவும் கருதப்படுகிறது. இந்நிலையில், அந்த மீனவ மக்களுடைய குறித்த வாழ்வாதார ஆதாரத்தைச் சுரண்டுகின்ற வகையில் செயற்படும் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடற்றொழில் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்ற வகையில் செயற்படும் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்தத் தவறினால் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி உள்ளிட்ட வடபகுதி மீனவர்கள் வீதிகளில் இறங்கிப் போராடவேண்டிய நிலை ஏற்படுமெனவும், அத்தகைய நிலையை ஏற்படுத்தவேண்டாமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எச்சரித்தார்.

பாராளுமன்றில் நேற்று (05) இடம்பெற்ற 2025 வரவு - செலவுத்திட்ட கடற்றொழில் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''கடற்றொழில் அமைச்சரே, இந்திய இழுவைப்படகுகள் செய்யும் அத்துமீறிய செயல்களால் எமது வடக்கு மீனவர்கள் தொழில் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எமது மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் சேதப்படுத்தப்படுகின்றன. வடக்கு மீனவர்களின் வாழ்வு கேள்விக்குறியாக்கப்படுகின்றது.

இலங்கைப் பெருங்கடலில் இந்தப் புல்டோசிங் அடித்தள விசைப்படகுகளின் செயற்பாடுகள் தொடர்ந்தால் எந்த மீனும் கடலில் பிடிக்க இயலாதநிலை விரைவில் ஏற்படும்.

இலங்கையின் கடலோரமக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித்தல் அல்லது மீன்வளம் தொடர்பான தொழிற்றுறையையே நம்பியுள்ளனர். அதுவே அவர்கள் அறிந்த ஒரே வாழ்வாதார நடவடிக்கையாகும். அந்த வாழ்வாதார ஆதாரம் அழிக்கப்பட்டால் மனிதப் பாதுகாப்பைப் பாதிக்கும் வகையிலான மிகப்பெரிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விளைவுகள் ஏற்படும்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள ஐந்து மாவட்டங்களில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய நான்கு மாவட்டங்களில் மீன்பிடியாளர்கள் தமது முழுமையான வாழ்வாதாரமாக மீன்பிடியையே நம்பி வாழ்கின்றனர்.

நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இந்தக் குடும்பங்களின் உணவுத் தேவைகள், பிள்ளைகளின் கல்வித் தேவை உட்பட அத்தியாவசியத் தேவைகளுக்கு இந்தக் கடலையே நம்பி, இதனால் கிடைக்கும் வருமானத்தையே தமது வாழ்வாதாரமாக எண்ணி இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில், மிகவும் கொடூரமான முறையில் சட்டவிரோதத் தொழில்கள் செய்து, இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டதாக அறியத் தந்திருக்கும் தொழில்களைக் கொள்ளையர்களைப்போல செய்துகொண்டிருக்கும் திருட்டுக்கும்பலைப் பிடிக்காமல் - சட்டத்தின் முன் நிறுத்தாமல் இருக்கக் காரணம்தான் என்ன?

உங்களுடைய மீன்பிடியாளர் சமூகத்தைப் புறக்கணிக்க வேண்டாம். வயிற்றில் அடிக்கவேண்டாம். எமது மீனவர்களை வாழவிடுங்கள் என்று தான் கேட்கின்றோம். சட்டவிரோத கடற்றொழில்களைச் செய்து மீனவர் சமூகத்தை அழித்துக்கொண்டிருக்கும் இலங்கையிலுள்ள சட்டவிரோதிகளையும் எல்லைதாண்டிவந்து எமது கடல்வளங்களை அழிக்கும் அயல்நாட்டு சட்டவிரோதிகளையும் தண்டியுங்கள்.

எமது மக்களை மேலும், மேலும் காயப்படுத்தாமல் கடற்படை, பொலிஸார், கடற்றொழில் திணைக்களப்பணியாளர்கள் தங்களுடைய கடமைகளைச் சீராகச் செய்தால் நிலைமைகள் சீராகுமெனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடற்றொழில் அமைச்சரே, எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தாங்களும் அறிவீர்கள்.

இந்திய இழுவைப்படகுகள் தமது எல்லைகளைத்தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைகின்ற விவகாரத்தில் இந்திய அரசாங்கம், இந்திய கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினரும் பிழையான விதத்தில் செயற்படுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதை இந்திய அரசும் இந்திய கடற்படையும் தடுக்கவேண்டும். அதேபோல், இலங்கைக் கடற்படையினரும் இந்த இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி எமது கடற்பரப்புக்குள் நுழையும்போது அதனைத் தடுக்கும் வகையில் விரைந்து செயற்படவேண்டும்.

மியன்மார் நாட்டு அகதிகள் படகொன்று அண்மையில் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வருகைதந்தது. குறித்த அகதிகள் படகு முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு வருகைதரும்வரை கடற்படையினருக்குத் தெரியாது. அவ்வாறெனில், கடற்படையினர் என்ன செய்துகொண்டிருந்துள்ளனர்?

இலங்கைக் கடற்பரப்பைப் பாதுகாக்கவேண்டியது இலங்கைக் கடற்படையின் பொறுப்பாகும். ஆகவே, இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சரே நீங்கள் தலையீடு



செய்யுங்கள். மீனவ மக்களைக் காப்பாற்றுங்கள்.

இல்லையேல், வடக்கில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலுமுள்ள மீனவ மக்கள் வீதியில் இறங்கிப்போராடுவார்கள். அந்த நிலையை ஏற்படுத்தாதீர்கள்'' - என்றார்

# இலங்கையின் கரிம தரநிலைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை



இலங்கையின் தேசிய கரிம விவசாயத்துக்கான சட்ட நிலை மற்றும் அதன் முன்மொழியப்பட்ட வேறுபாடுகள் தொடர்பான தேசிய ஆலோசனை வேலைத்திட்டமொன்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்றது.

தேசிய கரிம விவசாய முறையின் சட்டக் கட்டமைப்பில் முன்மொழியப்பட்ட மாற்றங்களை அரச மற்றும் தனியார் துறையினருக்கு அறிமுகப்படுத்துவதே இந்த ஒருநாள் பயிற்சிப் பட்டறையின் நோக்கமாகும்.

இலங்கையின் தேசிய கரிம தரநிலையை ஐக்கிய இராச்சியத்தின்(GB) கரிம விதிமுறைகளுடன் ஒருங்கிணைத்தல், ஒழுங்குமுறை இடைவெளிகளைக் கண்டறிதல் மற்றும் சர்வதேச தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல் போன்ற முக்கிய துறைகள் தொடர்பாக இந்தப் பயிற்சிப்பட்டறையில் கவனஞ்செலுத்தப்பட்டதுடன், இதற்கான தொழில்நுட்ப உதவியும் UKTP திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

# சரியான நகர முகாமைத்துவத்தினூடாக நாட்டை கவர்ச்சிகரமான சுற்றுலாக் களமாக மாற்ற முடியும்

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



சம்பிரதாய கட்டுமானங்களுக்கப்பாலான சரியான நகரத் திட்டமிடல் முறையின் மூலம் இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாக் களமாக மாற்றமுடியுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் நேற்று (05) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தியைத் திட்டமிடும்போது இலங்கையின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் திட்டங்களைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நகரங்கள் மாத்திரமன்றி, கிராம அபிவிருத்தியை மையப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் இங்கு நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின்போது கிராமிய கலாசாரம் மற்றும் மக்கள் வாழ்வியலின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரசல் அபோன்சு, நகர அபிவிருத்திக் கட்டுமானங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஆர்.ருசிர விதான உள்ளிட்ட தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களஅதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# வசந்த முதலிகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜூலை 15க்கு ஒத்திவைப்பு

(ஹனபி எம் தாஸீம்)

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் முன்னாள் அமைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் எட்டுப்பேருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் (04) மஹர எண் 01 நீதிமன்றத்தின் நீதவான் காஞ்சனா டி சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முன்னைய நீதிமன்றத் திகதிகளில், சில மாணவர்கள் உடல்நலக்குறைவு மற்றும் பரீட்சைகள் காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மேலும், வழக்கு தினத்தில் சந்தேக நபர்களான எட்டு மாணவர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகியதால் அடுத்த நீதிமன்றத் திகதி அறிவிக்கப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் முன்னாள் அமைப்பாளர் வசந்த முதலிகே, வணக்கத்துக்குரிய ரங்கரவவே ஜினரத்ன தேரர், நுவன் லஹிரு ஹேமந்த, பி.பி.விக்கிரமதுங்க, பி.எம்.ஸேனால் தனுச நெத்மின, நிமேஷ் தில்ஷான் பண்டார, கே.எஸ்.பி. கலுஆரச்சி மற்றும் நளின்குமார ஜயரத்ன ஆகிய எட்டுப்பேருமே இவ்வழக்கின் பிரதிவாதிகளாவர்.

2023ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியன்று இரவு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த களனி பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் இரண்டு செயற்பாட்டாளர்களை விடுவிக்கக்கோரி பல்கலைக்கழகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, இந்த எட்டு மாணவர்களும் கிரிபத்கொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.



# மட்டக்களப்பில் வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு:

# 06 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

**(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)**

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்லடி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட ஹோட்டல்கள், உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், பலசரக்குக் கடைகள், சுப்பர் மார்க்கட்டுகள் மீது செவ்வாய்க்கிழமை(04) சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பின்போது 20 வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டு 06 வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.முரளீஸ்வரனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.உதயகுமாரின் வழிகாட்டலில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த தேடுதல் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மனித பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்த, பழுதடைந்த, காலாவதியான, பிளாஸ்ரிக் பாத்திரங்களில் உணவுப் பொருட்களை விற்பனை செய்த, லேபிள் காட்சிப்படுத்தாத வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் 06 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 05 மணித்தியாலங்கள் வரை இடம்பெற்ற இச்சோதனையின்போது பெருமளவிலான பழுதடைந்த, மனித பாவனைக்குதவாத, காலாவதியான உணவுப் பொருட்கள் சுகாதார அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# மாவடிப்பள்ளியில் வீடு உடைக்கப்பட்டு நகை, பணம் திருட்டு: பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்து

**(பாறுக் ஷிஹான்)**

வீடொன்று சூட்சுமமாக உடைக்கப்பட்டு நகை, பணம் திருடப்பட்ட சம்பவம் ஒன்று காரைதீவு பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிப்பள்ளி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை(04) இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று(05) காரைதீவு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ரமழான் நோன்பு காலம் என்பதால் வீட்டுரிமையாளர்கள் இரவு வணக்க வழிபாட்டுக்குச் சென்று மீண்டும் வீடுகளுக்குத் திரும்பி இரவு 12 மணியளவில் உறங்கியவேளை குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன், அதிகாலை வேளை குறித்த வீட்டின் உரிமையாளர் நகைகள் வைக்கப்பட்டிருந்த அலுமாரி மற்றும் வீட்டின் ஜன்னல் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்து பின்னர் வீட்டைச் சோதனை செய்தபோது தங்க நகைகள், பணம் என்பன திருடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பில் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாரின் ஆலோசனையில் காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எஸ்.ஜெகத்தின் வழிகாட்டுதலில் காரைதீவு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாவடிப்பள்ளி உட்பட புறநகர் பகுதியில் அண்மைக்காலமாக திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சின்னபுல்லுமலை, உப்பூறல் பகுதிகளில் காட்டுயானை தாக்கி வீடுகள் சேதம்

## நிரந்தரத் தீர்வு கோரும் பிரதேச மக்கள்





**(செங்கலடி, மூதூர் செய்தியாளர்கள்)**

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சின்னபுல்லுமலை பகுதிக்குள் செவ்வாய்க்கிழமை (04) அதிகாலை நுழைந்த காட்டு யானை இரண்டு வீடுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

இதில் ஒரு வீட்டை முற்றாக உடைத்து சேதப்படுத்தி வீட்டின் சுவர், கதவு, ஜன்னல் வீட்டினுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளையும் நாசம் செய்து வீட்டிலிருந்த உபகரணங்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் யானையைத் துரத்தியுள்ளனர்.

இதேவேளை, சின்னபுல்லுமலை கிராமத்தில் மற்றொரு வீட்டின் சுவரையும் யானை அடித்து உடைத்துள்ளது. தாம் கஷ்டப்பட்டு கட்டிய வீட்டை இவ்வாறு யானை தாக்கியதில் உடைந்துள்ளதாகக் கவலை தெரிவிக்கும் சின்னபுல்லுமலை மக்கள் காட்டுயானைத்தொல்லையில் இருந்து தமக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறும் கோருகின்றனர்.

இதேவேளை, வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உப்பூறல் கிராமத்துக்குள் நேற்று புதன்கிழமை(05) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் இரு வீடுகளைச் சேதப்படுத்தியுள்ளதோடு, பயன்தரு தென்னை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இதன்போது வீட்டிலிருந்தோர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளதோடு வீட்டு உடைமைகள் மற்றும் அரிசி மூடைகளையும் இழுத்து சேதப்படுத்தியுள்ளது.

காட்டு யானையால் பாதிக்கப்பட்ட தமக்கு அரசாங்கம் நஷ்டஈடு தருவதோடு, யானைப் பாதுகாப்பு வேலி அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் வெருகல் உப்பூறல் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருதில் நோன்புக்கஞ்சி விநியோகிக்கும் பள்ளிவாசல்களில் சுகாதாரப் பரிசோதனை



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் நோன்புக்கஞ்சி தயாரித்து விநியோகம் செய்யும் பள்ளிவாசல்கள் முதலானவை செவ்வாய்க்கிழமை(04) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதனின் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஜே.எம்.நிஸ்தார், ஏ.எல்.எம்.அஸ்லம், ஏ.வாசித் அஹமட் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் முதலானோர் ஈடுபட்டனர்.

இதன்போது உணவகங்களில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற முறையில் உணவைக் கையாண்ட இரண்டு உணவக உரிமையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவ்வுணவுப் பண்டங்கள் உணவக உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன.

மேலும் பொதுமக்கள் உணவு கையாளும் நிறுவனங்களில் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து உடனடியாக அறிவிப்பதற்கு QR ஸ்டிக்கரும் உணவகங்களில் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மோட்டார் சைக்கிள் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

**(மண்டூர் செய்தியாளர்)**

வவுணதீவு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கொத்திபொல - வாழைக்காலை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை (03) இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காஞ்சிரங்குடா, கன்னன்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சண்முகநாதன் தயாபரன் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளை திருத்தவேலைக்காக நண்பர்கள் இருவருடன் கயிற்றில் கட்டிக்கொண்டு பின்நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து கையிலிருந்த கயிறு கைவிடப்பட்டதனால் மறுதிசையில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டதில் குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் அண்ணாத்துரை தர்சினியின் உத்தரவுக்கமைவாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்தார். சம்பவம் பற்றிய விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மயிலவட்டவான் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கல்



**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று மயிலவட்டவான் பாடசாலையின் அதிபர் திவ்யதேவின் வேண்டுகோளுக்கிணங்க இமயம் அமைப்பின் ஏற்பாட்டில் அப்பகுதியிலுள்ள வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு நேற்று(05) செங்கலடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரித்தானியா வாழ் நல்லுள்ளங்களின் நிதியுதவியுடன் செங்கலடி பிரதேச செயலாளர் தனபாலசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், இமயம் அமைப்பின் பொருளாளர் திருமதி கமலினி பிரசாத், மட்டக்களப்பு மாவட்டத் தகவல் திணைக்கள அதிகாரி வ.ஜீவானந்தன், பிரதேச சிறுவர் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஹுஸைட், இமயம் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.சசிகுமார் மற்றும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எல்.வசந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# விவசாயியின் பெயரில் போலி ஆவணம் தயாரித்து நஷ்டஈட்டுக்கு விண்ணப்பம்

## இலஞ்சம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் கைது

**(செங்கலடி செய்தியாளர்)**

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கமநல சேவை நிலையத்தில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் நேற்று புதன்கிழமை (05) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மைக்கால வெள்ளத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டதாக போலி ஆவணங்களைத் தயாரித்து செங்கலடியில் அரச வங்கியொன்றில் வைத்து பணத்தைப் பெற்றுக்கொண்ட வேளையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் இவரைக் கைதுசெய்துள்ளனர்.

சித்தாண்டியைச் சேர்ந்த பெண் விவசாயி ஒருவரின் பெயரில் ஆவணங்களைத் தயாரித்து நஷ்ட ஈட்டுக்காக விண்ணப்பித்திருந்தார். இந்த விவசாய நிலத்துக்கு அரசாங்கத்தால் 70 ஆயிரம் ரூபா பணத்தை அந்த விவசாயியின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. அந்தப் பணத்தில் 20 ஆயிரம் ரூபாவை விவசாயிக்குத் தருவதாக உறுதியளித்துள்ளதுடன் மீதி 50ஆயிரம் ரூபாவையும் தனக்கு வழங்கவேண்டுமென விவசாயியிடம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் விவசாயி வங்கிக்குச் சென்று 70 ஆயிரம் ரூபா பணத்தைப் மீளப்பெற்றுக் கொண்டு குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தொலைபேசி அழைப்பை விடுத்துள்ளார். இந்தவேளையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் வங்கிக் கிளைக்குச் சென்று பணத்தை விவசாயிடமிருந்து பெற்றுக்கொண்டபோது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் இந்த அபிவிருத்தி உத்தியோகத்தரைக் கைதுசெய்துள்ளனர்.



கிண்ணியா காதிரிய்யா ஜும்ஆப் பள்ளியின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு பள்ளிவாசல் மண்டபத்தில் திங்கட்கிழமை(03) இடம்பெற்றது. இதன்போது பொதுமக்கள், இளைஞர்கள் கலந்துகொண்டனர். (தம்பலகாமம் செய்தியாளர்)



கல்வி அமைச்சினால் கடந்த 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சமூக விஞ்ஞான போட்டியில் தேசிய ரீதியில் நான்காம் இடத்தைப்பெற்ற நற்பிட்டிமுனை கமு/லாபிர் வித்தியாலய மாணவன் எச்.அப்ரி அஹமட்டைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் சீ.எம்.நஜீப் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சீ.எம்.ஹலீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசு வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (கோணாவத்தை செய்தியாளர்)

# முறையான அனுமதியுடனும் கட்டணம் செலுத்தியுமே நிந்தவூர் பிரதேச சபை மண்டபம் பயன்படுத்தப்பட்டது

## தேசிய மக்கள் சக்தி நிந்தவூர் கிளை செயலாளர் அறிக்கை

**(பொலிவேரியன் செய்தியாளர்)**


நிந்தவூர் தேசிய மக்கள் சக்தி கிளை முறையான அனுமதி மற்றும் கட்டணம் செலுத்தியே பெப்ரவரி 28ஆம் திகதி கேட்போர் கூடத்தைப் பயன்படுத்தியது என்பதை இத்தால் உறுதிப்படுத்தியுள்ளோம் என நிந்தவூர் 17 (புதுநகர்), தேசிய மக்கள் சக்தி கிளையின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முகநூல் உள்ளிட்ட சில சமூகவலைத்தளங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ள வதந்திச் செய்தியின் உண்மை நிலை குறித்து வெளியிட்டுள்ள அந்த அறிக்கையிலே மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் வட்டாரக் குழுத் தலைவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவின் வழிகாட்டுதலிலும் தேசிய மக்கள் சக்தி கட்சி நிந்தவூர் கிளையின் முதன்மை செயற்பாட்டாளர் சம்சுன் அலி தலைமையிலும் நிந்தவூர் பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி இடம்பெற்றது.

எனினும், தற்பொழுது முகநூல் உள்ளிட்ட சில சமூகவலைத்தளங்களூடாக போலியான முறையிலும் ஊர்ஜிதம் செய்யப்படாமலும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் செயற்பாடுகளை அவமதிக்கும் வகையில் நிந்தவூர் பிரதேச சபைக் கேட்போர் கூடம் முறையான கட்டணம் செலுத்தாமல் தேசிய மக்கள் சக்தி கட்சியால் கையாளப்படுகின்றது என்ற செய்தி பரவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தெளிவூட்டும் வகையில் நிந்தவூர் தேசிய மக்கள் சக்தி கிளை முறையான அனுமதி மற்றும் கட்டணம் செலுத்தியே பெப்ரவரி 28 ஆம் திகதி கேட்போர் கூடத்தைப் பயன்படுத்தியது என்பதை இத்தால் உறுதிப்படுத் தியுள்ளோம். அதற்கான பற்றுச்சீட்டும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. போலியான கதைகளூடாக அண்மைக் காலங்களில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் செயற்பாடுகளில் சேறு பூச சிலர் நினைக்கின்றமை குறிப்பிடத்தக்கதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


11454
NPP organization Nintavur
Hall Rent
Hall Rent 10,000 00
Ten Thousand Only
Ten Thousand Only
PAID
PRADESIYA SABHA

# அரசாங்கம் தனது கொள்கைப் பிரகடனத்தை கிழித்துவிட்டு முன்னாள் ஜனாதிபதியின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சாடல்





''மேடைக்கு மேடை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிப் பத்திரத்தை கிழித்தெறிந்த ஜனாதிபதியும் அரசாங்கமுமே தற்போது நாட்டை ஆண்டு வருகின்றது. 2028ஆம் ஆண்டே நாடு எதிர்கொள்ளும் மிகக் கடினமான காலமாக அமையும். 2028இல் நாம் கடனை செலுத்த வேண்டியிருக்கிறது. இதற்குத் தேவையான பணம் நாட்டில் கையிருப்பில் இருந்தாக வேண்டும்'' என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

களனி தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடனை செலுத்துவதற்கான பணம் அரசாங்கத்தின் வருமானம் மூலம் ஈட்டப்பட வேண்டும். உற்பத்திப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் இருந்து ஈட்டப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டை கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் இங்கு எம்மால் செய்ய முடியாத விடயங்களுக்கு இணக்கப்பாடுகளை தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனவும் தொடர்ச்சியாக கூறி வந்தது. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் தற்போது இணக்கப்பாடு காணப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மக்கள் சார்பான ஒன்றாக மாற்றியமைப்போம் என நாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்தோம்.

நாட்டை சிக்கலுக்குள் ஆழ்த்தி ஆட்சியைப் பிடிக்க வேண்டிய எந்த அவசியமும் எமக்கில்லை. எமது நாட்டை சிக்கலில் தள்ளி, மக்களின் வாழ்க்கையை சீரழித்து, உயர்பதவிகளுக்கு வர நாம் ஒருபோதும் தயாரில்லை. அசாதாரணமான, கடினமான இலக்குகளுடனான உடன்பாடுகளை ஏற்படுத்தியதன் காரணமாக ஒரு நாடாக நாம் மிகவும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு கண்டுள்ள இந்த நிபந்தனைகளைத் திருத்தி, மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள சுமையை குறைக்க வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தானும் திசைகாட்டியும் இந்த இணக்கப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான எதிர்பார்ப்புகளை மக்களுக்கு வழங்கினோம். ஆட்சிக்கு வந்த திசைகாட்டியானது ஏலவே இருந்த சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை எந்த மாற்றமுமின்றி முன்னெடுத்து வருகின்றது. இதன் ஊடாக இந்த அரசாங்கமானது மக்களின் நம்பிக்கைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் துரோகமிழைத்துள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் தொடர்பில் ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையை பார்க்கும்போது எந்த அபிமானமும் கொள்ள முடியாது. இன்று சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கைகள் வெளியாகும் வரையில் அரச ஊழியர்களால் சம்பள அதிகரிப்பை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

06 மாதங்களுக்கு ஒரு தடவை சம்பள அதிகரிப்பு என்பது கனவாகவே காணப்படுகின்றது.

ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒருமுறையும் 20,000 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுத் தருவதாகக் கூறிய ஜே.வி.பி. அதைச் செய்யாமல், இந்தத் தருணத்திலும் மக்களை ஏமாற்றி வருகிறது. ஒரு நாடாக நாம் இரண்டு ஆபத்தான நிபந்தனைகளில் கையெழுத்திட்டுள்ளோம். அதாவது, முதன்மை செலவினத்தை 2.3 சதவீதமாகக் கட்டுப்படுத்தவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்மைச் செலவினத்தை 13 சதவீதமாக பேணவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இலகுபடுத்திச் சொல்வதானால், மக்களுக்காக அரசாங்கம் செலவிடக்கூடிய தொகையை மிகவும் சுருக்கியுள்ளது.

அரசாங்கம் முன்வைத்த தமது சொந்த கொள்கைப் பிரகடனத்தை துண்டுதுண்டாகக் கிழித்து, முன்னாள் ஜனாதிபதியின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்ல தீர்மானித்துள்ளதுடன், வழங்கிய வாக்குறுதிகளையும் மீறிக்கொண்டு, போதாக்குறைக்கு பொய்களையும் உரைத்துக் கொண்டுவருகின்றது. இதனால் மக்களே பெருமளவில் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர்'' என மேலும் தெரிவித்தார்.

## ரூ. 52 மில்லியன் பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 5.2 கிலோகிராம் குஷ் போதைப்பொருளுடன் 34 வயதுடைய பயணி ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

விமான நிலைய போதைப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று (05) அதிகாலை 01 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து தாய் ஏர்வேஸ் விமானம் TG 307 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார்.

அவரை சோதனை செய்தபோது, அவரது பயணப்பொதிக்குள் இருந்த உணவுப் பொட்டலங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட குஷ் போதைப்பொருளின் பெறுமதி ரூ. 52 மில்லியன் ஆகும்.

கைதுசெய்யப்பட்ட நபர், பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களுடன், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கண்டி இந்திய உதவித் தூதரகத்தில் சர்வதேச மகளிர் தின ஏற்பாடு

*(பேராதனை நிருபர்)*

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண்டி இந்திய உதவித் தூதரகம் ஏற்பாடு செய்துள்ள யோகா பயிற்சிப் பட்டறை பேராதனைப் பல்கலைக்கழக ஹொக்கி மைதானத்தில் சனிக்கிழமை (08) காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

இப்பயிற்சி பட்டறையில் பல்கலைக்கழக அனைத்து ஊழியர்களும் மாணவர்களும் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக உபவேந்தர் காரியாலயமும் கண்டி இந்திய உதவித் தூதரகமும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுர்ஜித் ,கண்டி இந்திய உதவித் தூதுவர் வி.எஸ்.சரண்யா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மகளிர் தினத்தன்று இந்நிகழ்வு நடைபெறுவதால் பெண்கள் கலந்துகொள்ள வேண்டும் என உபவேந்தர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மேல் மாகாண ஆளுநர் இடையே சந்திப்பு

*(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)*



இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் டேவிட் பைனுக்கும் (David Pine) மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப்புக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இருதரப்பு பொருளாதார மற்றும் துறைகளில் ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இச்சந்திப்பில் உரையாடப்பட்டதுடன், மேல் மாகாண சுற்றுலாத்துறை உள்ளிட்ட மற்றும் விடயங்களில் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகளை வழங்குமாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## போலி ஆவணங்களில் பதிவுசெய்து பயன்படுத்தப்பட்ட ஜீப் ஒன்று மீட்பு

*(எம் .ஏ.அமீனுல்லா)*

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பதிவுசெய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஜீப் ஒன்று காலதென்ன பிரதேசத்தில் உள்ள தேவாலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் (04) தெல்தெனிய பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேவாலயத்தின் பூசகர் (கப்புவா) முன்வந்து, இந்த வாகனத்தின் உரிமையாளர் தானே எனவும் 2023ஆம் ஆண்டு தனது பெயரில் பதிவுசெய்யப்பட்ட வாகனம் என்றும் கூறியுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜீப்பின் உரிமையாளர் யார் என்பது குறித்து குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, குறித்த தேவாலய பூசகர் 2023ஆம் ஆண்டு போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி மொன்டெரோ ரக ஜீப்பை தனது பெயரில் பதிவுசெய்துள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஜீப்பின் பெட்டறி அகற்றப்பட்டு, அதை இயக்க முடியாத நிலையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். ஜீப்பின் உரிமையாளர் எனக் கூறப்படும் பூசகருக்குச் சொந்தமான ஜீப் ஒன்றும் அதன் இலக்கத்தகடுகளில் ஏற்பட்ட




பிரச்சினை காரணமாக பொலிஸாரால் முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் தெல்தெனிய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஷான் அமரசிங்கவின் ஆலோசனையின் பேரில் பிரதேச குற்றப்புலனாய்வு பிரிவு நிலைய பொலிஸ் பரிசோதகர் திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் தினத்தை கொழும்பில் நடத்த ஏற்பாடு

வருடாந்தம் மார்ச் மாதம் 08ஆம் திகதி கொண்டாடப்படும் மகளிர் தினத்தை புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணியினர் கொழும்பில் நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிகழ்வு அன்றைய தினம் காலை 08 மணிமுதல் கொழும்பு-11 செட்டியார் தெரு இலக்கம் - 292இல் அமைந்துள்ள கல்யாண முருகன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது குறித்து அமைப்பின் தலைவி ரஞ்சனி சுரேஸ் மற்றும் செயலாளர் பிரியதர்ஷனி விக்கினேஸ்வரன் ஆகியோர் தெரிவித்திருப்பதாவது,

அமைப்பின் நிறுவுனர் ராதாமேத்தா மற்றும் முக்கியஸ்தர் சண்மு ஆகியோரது வழிகாட்டலில் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கிய அம்சமாக எமது நாட்டில் பெண்களின் மேம்பாட்டுக்கு மட்டுமன்றி சமூக மேம்பாட்டுக்காகவும் உழைத்துவரும் மூத்த ஆளுமைகளில் ஐந்து பெண்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு 'வீரவனிதை' என்ற பட்டத்தை வழங்கி கௌரவிக்கவுள்ளோம். இந்த பட்டமளிப்பு தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் மகளிர் தினத்தில் வழங்கப்படும்.

அத்தோடு பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த 10பேருக்கு உலருணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கவுள்ளோம். மேலும் கிளின் ஸ்ரீலங்கா திட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் துப்புரவு பெண் தொழிலாளர்களுக்கு சேலை மற்றும் உதவிப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

இளம்பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஓவியப்போட்டி ஒன்றும் அன்றைய தினம் நேரடிப் போட்டியாக நடைபெறவுள்ளது. இதில் வெற்றிபெறுவோருக்கு முன்னர் அறிவித்துள்ளபடி பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

சிறப்பு நிகழ்வுகளாக பேச்சு, நடனம் மற்றும் பாடல் இசைக்கும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

முதன் முறையாக மத்திய கொழும்பில் ஒரு மகளிர் அமைப்பு தோற்றம் பெற்று தனது மூன்றாவது நிகழ்வாக இந்த நிகழ்வை நடத்துகின்றது. எனவே, இந்த அமைப்பின் மேன்மைக்கு அணி சேர்க்கும் வகையில் பெண்கள் அணி திரண்டு வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## வளர்ப்பு யானை தாக்கி பாகன் உயிரிழப்பு

*(அநுராதபுரம் நிருபர்)*

பொடி ராஜு என்றழைக்கப்படும் வளர்ப்பு யானையொன்று தாக்கியதில் யானைப் பாகன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புவக்பிட்டிய பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (04) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஹபரணை, புவக்பிட்டிய பாலத்துக்கு அருகிலுள்ள கால்வாயிலில் நீராடிவிட்டு மீண்டும் வீட்டுக்கு அழைத்து வரும்போது பாகனை யானை தாக்கியுள்ளது.

இவ்வளர்ப்பு யானை மீகொட பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானது என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வட்டாரக் கட்சிகளின்

*(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

### 02. சிவஞானம் சொல்வதைப்போலத் தமிழ் மக்களின் அரசியலை முன்னிட்ட தீர்மானத்தின் உந்துதலா?

இல்லை, அப்படியாயின் அது ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவடைய விட்டிருக்காது. அப்படித்தான் பிளவடைய விட்டிருந்தாலும் அதற்குப் பிறகான சந்தர்ப்பங்களில் எல்லாம் அதை மீள்நிலைப்படுத்துவதற்கு முயற்சித்திருக்கும். அப்படி நடக்கவேயில்லை. பாராளுமன்றத் தேர்தலின்போது கூட கூட்டமைப்பாக நிற்போம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கேட்டிருந்தனர். அதற்குத் தமிழரசுக் கட்சி சம்மதிக்கவே இல்லை.

மட்டுமல்ல, பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகும் கூட கடந்த நான்கு மாதங்களாக தமிழரசுக் கட்சி தனித்தே செயற்பட்டது, செயற்பட விளைந்தது. இப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியே உள்ள சக்திகளை உள்ளீர்த்து தன்னைப் பலப்படுத்த முற்படும்போதுதான் அது கூட்டமைப்பை மீள்நிலைப்படுத்துவதைப் பற்றிச் சிந்திக்கிறது.

சிவஞானம் சொல்வதைப்போல, தமிழ் அரசியலின் எதிர்காலம், பாதுகாப்பு போன்றவற்றைக் குறித்துத் தமிழரசுக் கட்சி சிந்திப்பதாக இருந்தால், அது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிந்திப்பதைப்போல, தனக்கு வெளியே உள்ள அனைத்துத் தரப்புகளையும் உள்ளீர்க்க முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்த்தரப்பு ஒரு பலமான கூட்டாக, அணியாக மாறும் – நிற்கும். அதற்குப் பின்னர் அதனுடைய அரசியல் உள்ளடக்கத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

ஆனால், இதற்குத் தமிழரசுக் கட்சி தயாராக இல்லை. இதையே சிவஞானத்தின் குறுகிய கடிதம் காட்டுகிறது. அவர் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ ஆகியவற்றுக்குத்தான் அழைப்பை விடுத்துள்ளார். ஆகவே, இங்கே ஒரு தெளிவான சூதே நடக்கிறது.

உருவாகி வரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணியைச் சிதைப்பதே இதனுடைய நோக்கமாகும். அதாவது வரலாற்றில் மீண்டும் செயற்பாட்டு அரசியல் தரப்பு பலமடைவதை தமிழரசுக் கட்சி விரும்பவில்லை. (தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, ஏனைய தமிழ் மிதவாதத் தரப்புகளும்தான்). மறுவளமாக நாம் ஒற்றுமைக்கு அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள் நிலைப்படுத்துவதற்கு முயற்சித்தோம். அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை என்று காட்டியும் விடலாம்.

ஆகவே ஒற்றுமைக்குத் தாம் எதிரானவர்களில்லை. அதற்காகக் கதவுகளைத் திறந்தோம். அவர்கள்தான் வரவில்லை. என்பதால் அவர்களை – ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணியை – மக்கள் நிராகரிக்க வேண்டும் என்பதை சொல்லாமற் சொல்வதாகும். இதன்மூலமும் தமிழரசுக் கட்சி தன்னைச் சுத்தப்படுத்தி – நியாயப்படுத்தி முன்னிலைப்படுத்துவதற்கு முயற்சிக்கிறது. பதிலாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணியைப் பலவீனப்படுத்துவதற்கு – கூட்டமைப்பை மீள உருவாக்குவதற்கு மறுக்கிறது என்று காட்டுவதற்கு – விளைகிறது.

### 03. இது சிவஞானம் தனித்து எடுத்துள்ள தீர்மானமா?

அதாவது சம்பந்தன், மாவை சேனாதிராசாவைப் போல ஏனைய தரப்புகளை மதிக்காமல் நடக்கும் தலைமை தன்னுடையதல்ல. சம்பந்தனையும் மாவையையும் நீங்கள் தேடிச்சென்று சந்திக்க வேண்டும். அப்படிச் சந்தித்தாலும் உங்களுடைய எந்தக் கோரிக்கைகளையும் (கதைகளையும்) அவர்கள் கேட்பதேயில்லை. ஆனால், தான் அவ்வாறானவரில்லை. உங்களைத் தேடி மன்னாருக்கும் வருவேன். உடுவிலுக்கும் வருவேன். இருபாலைக்கும் வருவேன். ஏன் அரசியலில் சிறுபராயத்தைக் கொண்ட ஐங்கரநேசனிடமும் தேடிச் செல்வேன் என்று காட்ட விளைகிறார் சிவஞானம். இதன்மூலம் தானொரு மாற்றுத் தலைவர் என்றுணர்த்த முற்படுகிறார். இதன்வழியாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மட்டுமல்ல, தமிழ்த்தரப்பின் தலைவராகவும் தன்னை அடையாளப்படுத்துவதற்கு விளைகிறார் சிவஞானம்.

இந்தச் சூழலில், இவற்றுக்குப் பின்னால் உள்ள விடயங்களைப் பார்க்க வேண்டும்.

சிவஞானம் தனித்துத் தீர்மானம் எடுப்பதற்கு தமிழரசுக் கட்சி இடமளிக்காது. ஏனென்றால், ஏற்கனவே கட்சியின் கூட்டுத் தீர்மானத்துக்கு மாறாக முடிவுகளை எடுத்தவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளது கட்சி. மட்டுமல்ல, இவ்வாறான அரசியல் விடயங்களைக் கையாள்வதற்கு அரசியற் குழுவொன்றை அது உருவாக்கியுள்ளது. அதனுடைய தீர்மானமில்லாமல், தன்னிச்சையாக சிவஞானம் தீர்மானத்தை எடுக்க முடியாது. ஆகவே தமிழரசுக் கட்சியின் தீர்மானம் – விருப்பமே இது என்று தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

பல்வேறு விதமான அரசியல் நிலைப்பாடுகளையும் வெவ்வேறு விதமான குணாம்சங்களையும் கொண்ட தரப்புகள் ஒருங்கிணைவதில் (ஒருங்கிணைப்பதிலும்தான்) சிக்கல்கள் இருப்பது வழமை. கூடவே ஒவ்வொன்றினது செயற்பாட்டுப் பரப்புகளும் வேறுபட்டவையும் கூட. இதுவும் ஒருங்கிணைவில் சில தயக்கங்களையும் இடர்பாடுகளையும் உண்டாக்கும்.

ஆனால், இதையெல்லாம் கடந்து நிற்கக் கூடிய அரசியல் உணர்வும் அரசியற் புரிதலும் ஏற்படுமாக இருந்தால் அது, குறித்த கூட்டின் முதலாவது வெற்றியாகும்.

அரசியற் கூட்டுகள் அல்லது கட்சிகளுக்கிடையிலான ஒருங்கிணைவுகள் பொதுவாக சில அடிப்படைகளில் அமைவதுண்டு.

01. கொள்கையின் அடிப்படையில் (Based on principle or policy base).

02. பிரச்சினைகளின் அடிப்படையில் (Based on the issues or issues base).

03. சூழ்நிலைகளின் நிமித்தமாக (Due to circumstances).

04. புறச் சக்திகளின் அழுத்தத்தினால் Due to the pressure of external forces).

இவ்வாறான நிலைகளில் அமைகின்ற கூட்டுகள் அல்லது ஒருங்கிணைவுகளில் அந்தத் தன்மை – இயல்பு – வெளிப்படும். குறிப்பாக புறச் சக்திகளின் அழுத்தத்தினால் ஏற்படுகின்ற அல்லது ஏற்படுத்தப்படுகின்ற கூட்டு என்பது, ஒட்டாத மண் போலவே காணப்படும். வெளி அழுத்தத்தின் காரணமாக நிகழும் விரும்பாத திருமணத்தைப்போலிருக்கும் அந்தக் கூட்டு – ஒருங்கிணைவு.

ஆனால், கொள்கையின் அடிப்படையில் (Based on principle or policy base) அமைகின்ற ஒருங்கிணைவோ அல்லது கூட்டோ அப்படியிருக்காது. அது கட்டிறுக்கமான ஒருங்கிணைவாக அல்லது கூட்டாக இருப்பதற்கான வாய்ப்புகளை அதிகமாகக் கொண்டிருக்கும். காரணம், எதற்காக இந்தக் கூட்டு, எந்த இலக்கை அடைவதற்காக இந்த ஒருங்கிணைவு என்ற நோக்கமும் புரிதலும் அதற்கிருக்கும். அது கொள்கை சார்ந்ததாக இருப்பதால், இனவிடுதலை அல்லது சமூக விடுதலை அல்லது வர்க்க விடுதலை என ஏதோ ஒன்றின் பிரதிபலிப்பு அதிலிருக்கும்.

இது இப்போது தமிழ் அரசியற் தரப்பின் மீதான நெருக்கடியை எதிர்கொள்வதற்கான கூட்டாகவே பெரிதும் காணப்படுகிறது. கூடவே, பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான கூட்டாகவும் உள்ளது. இந்த இரண்டையும் எதிர்கொள்வதற்கு ஒரு பலமான அரசியல் கூட்டே அவசியமாகும். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரே நேரத்தில் சிங்களத் தரப்பையும் அரசையும் தமிழ்த் தரப்பையும் எதிர்கொண்டு நிமிர வேண்டியுள்ளது. வரலாற்றுச் சக்திகள் வரலாற்றில் நிமிர்வது வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் வரலாற்றுப் பொறுப்பை ஏற்றுச் செயற்படுவதன் ஊடாகவே. அப்படி நிகழ்ந்தால் தமிழரின் அரசியல் சில படிகள் முன்நகரும்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக இயங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. வலியுறுத்து

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த காலங்களில் நடைபெற்றிருந்த அரசியல் தலையீட்டை இந்த அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை என்றால் நீங்கள் இந்த விடயத்தை செய்யவேண்டும். எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்தார்.

பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுசார் குழு நிலை விவாதம் பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் (04) இடம் பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கட்டிட அனுமதியின் பெயர் மாற்றம், தலைப்பு மாற்ற சான்றிதழ், நிலங்களின் உப பிரிப்புகள், நிலங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தெருக்கோடு சான்றிதழ்கள் என்பன அனைத்தும் உள்ளூராட்சி அமைப்புகளின் உப அலுவலர்களால் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்ற உப உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு மாகாண சபையின் திறன் குறைபாடு காரணமாக இந்த ஆறு வேலைகளும் உள்ளூராட்சி அமைப்பின் பிரதான அலுவலகத்தால் செய்யப்படும் என்று ஒரு சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளனர்.

இந்த நடைமுறையால் தற்போது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்த விவகாரத்தில் அரசாங்கம் தலையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். உப அதிகாரிகள் இந்தப் பணிகளைச் செய்வதை உறுதிசெய்ய தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கவும். இல்லையேல் மக்களை சிரமத்துக்குள்ளாக்கும். முடிந்தவரை



அடித்தட்டு மக்களுக்கு வசதிகளை கொண்டு செல்வதே உங்கள் அரசின் நிலைப்பாடு என்றால் இந்த விடயத்திலும் நீங்கள் தலையிட வேண்டும்.

சாவகச்சேரி பிரதேச செயலகம், நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ளும் செயலகமாகும். குறித்த பிரதேச செயலகம் உள்ளடக்கியதாக கருதப்படும் நிலப்பரப்பு மிகவும் பெரியது. 2001ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அந்த பிரதேச செயலகத்தை இரண்டு புவியியல் பிரதேசங்களாகப் பிரிக்குமாறு அரச நிர்வாக அமைச்சிடம் எழுத்துமூலமான கோரிக்கையை முன்வைத்திருந்தேன் என்பது எனக்கு நினைவிருக்கிறது. தற்போதுள்ள நிலையில் சாவகச்சேரியை அடிப்படையாக வைத்து கொடிகாமத்தை மையமாகக்கொண்டு கொடிகாமம் பிரதேசத்தில் இருந்து புதிய பிரதேச செயலகத்தை உருவாக்குதல் வேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக அலுவலகம் 1989 முதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 17/ 3/ 1993 அமைச்சரவைப் பத்திரம் 31/3/ 1993 ஆம் திகதிய குறிப்பாணை மூலம் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கப்பட்டது. 09.07.1993 திகதியிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின்மூலம் பொது நிர்வாக அமைச்சு இதனை இரண்டு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தியது.

இன்று துரதிர்ஷ்டவசமாக, அரசியல் காரணங்களால் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முழுமையாகச் செயற்படுத்த முடியாத வகையில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு கணக்காளர் இல்லாமைக்கு அரசியல் தலையீடே காரணமாக அமைந்துள்ளது. இதனால் செயலகத்தின் பல பகுதிகள் செயற்பட முடியாமல் உள்ளது.

படிப்படியாக கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துக்கு மாற்றுவதற்கு தற்போது முயற்சிகள் நடைபெறுகின்றன. கடந்த அரசாங்கத்தில் இதனை உப அலுவலகமாக தரமிறக்கப்போவதாக பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் தரமிறக்கும் செயற்பாட்டை நிறுத்த வேண்டும். 1989இல் எடுக்கப்பட்ட முடிவு இது. அரசியல் தலையீடு காரணமாக இந்த பிரச்சினை நீடித்து வருகிறது. வடக்கு, கிழக்கை குறிப்பாக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பார்கள் என நினைக்கிறேன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முழுமையாக இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த காலங்களில் நடைபெற்றிருந்த அரசியல் தலையீட்டை இந்த அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை என்றால் நீங்கள் இந்த விடயத்தை செய்யவேண்டும். எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன். இந்த விடயத்துக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் – என்றார்.

# இலங்கையில் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய மீன்பிடிக் கப்பல்






இலங்கையில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய மீன்பிடிக்கப்பலின் வெள்ளோட்டம் நேற்று முன்தினம் (04) இடம்பெற்றது.

இலங்கை உற்பத்தியாளர்களின் அறிவு, திறன் என்பவற்றால் நவீன தொழில்நுட்பத்துடன் Dhanusha Marine நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த கப்பல், சோமாலியாவிலுள்ள அரச நிறுவன மொன்றுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையில் உற்பத்தி பொருளா தாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான பயணத்தில் இது முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. இந்நிகழ்வில் அமைச் சர்கள் மற்றும் முக்கிய அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# 1990 சுவசெரிய அறக்கட்டளையுடன் மருத்துவ உதவிக்கான அணுகலை வலுப்படுத்தும் செலான் வங்கி




செலான் வங்கி 1990 சுவசெரிய அறக்கட்டளையின் 'Adopt an Ambulance முன்முயற்சியின் கீழ், அம்பியூலன்ஸ் ஒன்றின் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தலுக்கு வழிகோலியது. புத்தல பிரதேசத்துக்குள் இயங்கும் இந்த மறுசீரமைக்கப்பட்ட அம்பியூலன்ஸ், மருத்துவ உதவிக்கான அணுகலை ஊக்குவிப்பதன் ஊடாக அப்பகுதியில் சுகாதாரப் பராமரிப்பை வலுப்படுத்தும்.

செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரமேஷ் ஜயசேகர மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவிப் பொது முகாமையாளரான ஆசிரி அபயரத்ன ஆகியோர் 1990 சுவசெரிய அறக்கட்டளையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான செஹான் டி சில்வாவிடம் 'Adopt an Ambulance திட்டத்துக்கான நன்கொடையை வழங்கினர்.

நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க சுகாதார முயற்சியை வலுப்படுத்துவதில் செலான் வங்கி மற்றும் 1990 சுவசெரிய அறக்கட்டளையின் ஒருங்கிணைந்த நோக்கத்தை இந் நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.

1990 சுவசெரிய அறக்கட்டளையின் 'Adopt an Ambulance திட்டம், நாடு முழுவதும் மருத்துவ உதவிகளை வழங்கி தற்போது நாட்டின் சுகாதாரத் துறையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

நாடு முழுவதும் கிராமப்புற மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கி வரும் இந்த அம்பியூலன்ஸ்கள், அவசர தேவைகளின்போது வாழ்க்கைக்கு இன்றியமையாத சுகாதார வசதிகளை சமூகங்களுக்கு வழங்குவதற்கான நம்பகமான தீர்வாக உள்ளூர் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துகின்றன.



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் நடத்திய இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் (04) மாலை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,பிரதியமைச்சர் முனீர் முலாபர் உள்ளிட்ட அரசியல்வாதிகள்,வெளிநாட்டுத் தூதுவர்கள்,உலமாக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# 'சீரோ சான்ஸ்' பாடசாலை போட்டி நிகழ்ச்சியில் வெற்றிபெற்றோருக்கு பரிசு வழங்கும் நிகழ்வு



இலங்கையில் 18 மாவட்டங்களைச் சேர்ந்த, 32 பாடசாலைகளில் 170 மாணவர்கள் பங்குபற்றிய, அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் 'சீரோ சான்ஸ்' (Zero Chance) சித்திரம் மற்றும் கட்டுரை போட்டியின் 2ஆவது போட்டித் தொடருக்கான பரிசு வழங்கும் விழா நேற்று (05) கொழும்பு BMICH இல் கொண்டாடப்பட்டது.

கல்வி அமைச்சு, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சும் இணைந்து, "ஏமாறாதிருப்போம் தவறு செய்யாதிருப்போம்" (Norawatemu Novaradimu) எனும் எண்ணக்கருவில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கான கடல்வழி குடிப்பெயர்வு எனும் தலைப்பில் 2024 ஜூன் முதல் ஓகஸ்ட் வரை இடம்பெற்ற போட்டித் தொடரில், 1,520 மாணவர்கள் தங்களது கலைப்படைப்புகள் மற்றும் கட்டுரைகளை வெளிப்படுத்தினர்.

இந்தப் பரிசு வழங்கும் விழாவில் உரையாற் றிய இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், இந்த முயற்சியானது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் சீரோ சான்ஸ் செய்தியை வலுப்படுத்த உதவியதோடு, பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்கள் இதுபோன்ற பயணங்களை மேற்கொள்வதிலிருந்து தடுப்பதை உறுதிசெய்கிறது என்றார்.

போல் ஸ்டீபன்ஸ் மேலும் தெரிவிக்கையில்,

"சீரோ சான்ஸ் மூலோபாய தகவல் தொடர்பாடல் பிரசாரமானது கடல் வழியாக ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதிலிருந்து மக்களைத் தடுப்பதற்கும் அவர்களுக்கு இது பற்றித் தெரிவிப்பதற்கும் விழிப்பூட்டுவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2024 சீரோ சான்ஸ் சித்திரம் மற்றும் கட்டுரை போட்டியின் ஆக்கங்களை மதிப்பீடுசெய்ய எனக்கும் வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் நான் பார்த்த ஆக்கங்கள் தொடர்பிலும் மகிழ்ச்சியடைகிறேன். குறித்த எண்ணக ருவை தங்களது சொந்த முயற்சியில் ஆக்கபூர்வமான படைப்புகள் மூலம் வெளிப்படுத்த மாணவர்கள் அருமையாக பணியாற்றியுள்ளனர். அத்துடன், இது பெருமளவான பாடசாலைகளில் ஏற்படுத்தியுள்ள பங்கேற்பானது ஒப்பிட முடியாததாகும். இதற்காக ஆதரவளித்த அமைச்சு, பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி" என்றார்.

இந்த விழாவில் அவுஸ்திரேலியாவுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் திருமதி லலிதா கபூரும் கலந்து கொண்டார்.

09 முதல் 11 வயது மற்றும் 12 முதல் 13 வயது வரையான இரண்டு வயது குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இடம்பெற்ற இந்தப் போட்டியின் ஆக்கங்கள், கல்வி அமைச்சு, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட 14 நடுவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

மாணவர்கள் தங்களது ஆக்கங்களை உருவாக்குவதற்கு முன்னர் அவர்களுக்கு இந்த எண்ணக்கரு தொடர்பில் எந்தவொரு முறையான தகவலும் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என ஸ்டீபன்ஸ் இங்கு சுட்டிக்காட்டினார்.

இந்த முயற்சி குறித்து கருத்துத் தெரிவித்த கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ, "எமது நட்பை மேலும் வலுப்படுத்தவும் இந்த சவாலை உரிய முறையில் எதிர்கொள்ளவும் சட்டவிரோத இடம்பெயர்வின் ஆபத்துகள் மற்றும் அது மக்களின் உயிருக்கு ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை எடுத்துக்கூறும் பல்வேறு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்த இரு நாடுகளும் ஒத்துழைத்துள்ளன. இது உண்மையில் ஒரு பாராட்டத்தக்க சாதனையாகும்" என்றார்.

இந்த திட்டங்களில், "அவுஸ்திரேலியாவுக்கு படகில் பயணம் செய்ய முயற்சிப்பது ஒரு முட்டாள்தனமான செயல்" எனும் தலைப்பின் கீழ், 15 மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களை அணுகி, 2023 இல் முதல் முறையாக கட்டுரை மற்றும் கலைப் போட்டியை ஆரம்பித்தோம். வெற்றியாளர்களுக்கு, தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் கணினிப் பாடநெறி புலமைப்பரிசிலாக வழங்கப்பட்டது. இந்த வெற்றியின் அடிப்படையில், இரண்டாவது கட்டம் 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி BMICH இல் இடம்பெற்ற விருது விழாவில் நிறைவடைந்தது. இந்த இளம் மனங்களின் நம்பமுடியாத படைப்பாற்றலை பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் மூலம் நாம் வெளிப்படுத்தினோம்.

வெற்றிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு இணைந்து கையொப்பமிட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் (வார இதழ்) | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# சேர்பிய பாராளுமன்றில் அமளி; புகைக்குண்டு வீச்சால் பரபரப்பு




## எம்.பிக்கள் மூவர் காயம்; ஒருவருக்கு பக்கவாதம்

சேர்பியா, பாராளுமன்றத்தில் கடும் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள், வண்ணப் புகைக் குண்டுகளை வீசியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் 3 எம்.பிக்கள் காயமடைந்துள்ளனர்.

மத்திய மற்றும் தென்கிழக்கு ஐரோப்பிய நாடான சேர்பியாவில், பிரதமர் மிலோஸ் உசெவிக் தலைமையில், சேர்பிய முற்போக்கு கட்சி ஆட்சிசெய்து வருகிறது. நான்கு மாதங்களுக்கு முன்னர், அங்குள்ள ரயில் நிலையமொன்றின் மேற்கூரை பெயர்ந்து வீழ்ந்த விபத்தில், 15 பேர் உயிரிழந்தனர்.


இச்சம்பவத்தைத் தொடர்ந்து, அரசுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் தொடர் போராட்டம் நடத்தினர். இதனால் ஜனவரி இறுதியில், பிரதமர் பதவியை மிசோல் உசெவிக் இராஜிநாமாச் செய்தார். எனினும், இதற்கு சேர்பியா பாராளுமன்றம் உறுதிப்படுத்தவில்லை. செர்பியா சட்டப்படி, பிரதமரொருவர் இராஜிநாமாச் செய்தால், பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்த வேண்டும். இந்நிலையில் நேற்றுமுன்தினம், சேர்பியா பாராளுமன்றம் கூடிய நிலையில், மிசோல் உசெவிக் இராஜிநாமாவை உடனடியாக உறுதிசெய்ய வேண்டுமெனத் தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

சபாநாயகர் அனா பிரனாபிக்கை முற்றுகையிட்டு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், நிலைமை மோசமானது. எதிர்க்கட்சி எம்.பிக்களை சபைக் காவலர்கள் தடுத்து நிறுத்த முயன்றனர்.

அப்போது அவர்களுக்கும் எம்.பிக்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால், கோபமடைந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள், தாங்கள் கொண்டு வந்திருந்த கறுப்பு மற்றும் இளஞ்சிவப்பு புகைக் குண்டுகள் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதனால், பாராளுமன்றத்தை புகை மண்டலம் சூழ்ந்தது.

இத்தாக்குதலில், மூன்று எம்.பிக்கள் காயமடைந்தனர். ஆளுங்கட்சி எம்.பி., ஜாஸ்மினா ஒப்ராடோவிக் என்பவருக்கு பக்கவாதம் ஏற்பட்டதையடுத்து, அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.





# அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது

## ஜனாதிபதி ட்ரம்ப்

''அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது'' என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டுள்ள ட்ரம்ப், அமெரிக்க பாராளுமன்றமான ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தொடரில் முதன்முறையாக உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப், ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்றுக்கொண்ட ட்ரம்ப் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் பாராளுமன்றத்தின் தனது முதல் உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''அமெரிக்கா திரும்ப வந்துவிட்டது. அமெரிக்காவில் பொற்காலம் தொடங்கிவிட்டது'' என முதல் உரையைத் தொடங்கினார்.

பெரிய கனவுகள் மற்றும் தைரியமான செயல்களுக்கான நேரமிது என்றும், ஒவ்வொரு நாளும் எனது நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவுக்கு நல்ல மாற்றங்களை கொண்டுவர முயற்சிக்கிறேன்.

மேலும், வரலாறு இதுவரை காணாத அளவுக்கு இத்தேர்தல் நடந்துள்ளது. ஜனநாயகத்தை மீண்டும் மீட்டெடுத்துள்ளோம். மெக்சிகோவுக்கும் கனடாவுக்கும் பில்லியன் டொலர்களை மானியமாக கொடுக்கிறோம். இனி அது நிறுத்தப்படும். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கார்களை வாங்கினால், வாகனக் கடன் வரி குறைப்பு செய்யப்படும். உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு வரியை குறைக்க விரும்புகிறோம். சட்டவிரோதமாக எல்லைத் தாண்டி வரும் நிகழ்வுகள் கடந்த ஒரு மாதத்தில் வெகுவாக குறைந்துள்ளன எனத் தெரிவித்தார்.

### அமெரிக்காவில் ஆண் - பெண் இரண்டு பாலினங்கள் மட்டுமே

ஆண் மற்றும் பெண் என இரண்டு பாலினங்கள் மட்டுமே உள்ளன என்பதை அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரபூர்வ கொள்கையாக மாற்றும் உத்தரவில் நான் கையெழுத்திட்டேன். 48 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு மோசமான பணவீக்கத்தை நாங்கள் சந்தித்தோம். எலான் மஸ்க் கடினமாக உழைத்து வருகிறார்.

### இந்தியா சீனாவுக்கு வரிவிதிப்பு

கடந்த நான்கு ஆண்டுகளில் மற்றவர்கள் செய்ததை விட 43 நாட்களில் நாம் அதிகமாக சாதித்துள்ளோம். ஏப்ரல் 02ஆம் திகதி இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பொருட்கள் மீது அமெரிக்கா பரஸ்பர வரிகளை விதிக்கும்.

அமெரிக்கா மீது மற்ற நாடுகள் விதிக்கும் எந்தவொரு வரிகளுக்கும் அமெரிக்கா சமமான நடவடிக்கைகளுடன் பதிலடி கொடுக்கும். வரிகள் அமெரிக்காவை மீண்டும் மீண்டும் பணக்காரர்களாகவும், சிறந்தவர்களாகவும் மாற்றுவதாகும்.

ஐரோப்பிய நாடுகள், சீனா, பிரேஸில், இந்தியா மற்றும் பிற நாடுகள் நாம் வசூலிப்பதை விட கணிசமாக அதிக வரிகளை வசூலிக்கின்றன. இது மிகவும் நியாயமற்றது. இந்தியா நம்மிடம் 100 சதவீத வரிகளை வசூலிக்கிறது. மற்ற நாடுகள் நமக்கு என்ன வரி விதித்தாலும் நாம் அவற்றுக்கு வரி விதிப்போம் - என்றார்.

ட்ரம்ப் உரையாற்றிக்கொண்டிருந்தபோதே ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் கடுமையான அமளியில் ஈடுபட்டனர்.

### எதிர்க்கட்சி எம்.பி. வெளியேற்றம்



பாராளுமன்றக் கூட்டத்தில் ட்ரம்ப் முதல் உரையாற்றிய நிலையில், எதிர்க்கருத்து தெரிவித்த ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் வெளியேற்றம் செய்யப்பட்டார். ட்ரம்ப் பேசும்போது, "உங்களுக்கு அதிகாரம் இல்லை" என உரத்த குரல் எழுப்பிய க்ரீனை, இருக்கையில் அமருமாறு சபாநாயகர் அறிவுறுத்தினார். எனினும், தொடர்ந்து க்ரீன் தனது கருத்தைக் கூறவே, உடனே பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து அவரை வெளியே கூட்டிச்செல்ல உத்தரவிடப்பட்டது.

வெளியேறிய க்ரீன் செய்தியாளர்களிடம் பேசுகையில், ''இது உலகின் பணக்கார நாடு, ஆனாலும் நமது நாட்டில் மக்களுக்கு நல்ல மருத்துவ வசதி கிடையாது. இதற்காக நாம் சிறப்பாகச் செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.


### எதிர்ப்பில் ஈடுபட்ட பெண் எம்.பிக்கள்



க்ரீன் மட்டுமின்றி, ஜனநாயகக் கட்சிப் பெண் எம்.பிக்கள் பலரும் அதிகரித்து வரும் செலவுகளைக் கண்டித்து ஜனாதிபதி ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், இளஞ்சிவப்பு நிற ஆடைகளை அணிந்து வந்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அவர்களைத் தவிர்த்து மற்ற எம்.பிக்கள் உக்ரைனுக்கு ஆதரவைக் காட்ட, அந்நாட்டின் கொடியின் வண்ணங்களைக் குறிக்கும் வகையில் மஞ்சள் மற்றும் நீல நிற உடைகளை அணிந்து வந்திருந்தனர்.

# ஜப்பானை மிரட்டும் கட்டுக்கடங்கா காட்டுத்தீ



ஜப்பானில் 50 ஆண்டுகளில் இல்லாதளவு ஒரு வார காலமாக காட்டுத்தீ பற்றியெறிந்து வருகிறது. கட்டுக்கடங்காது பற்றியெரியும் காட்டுத்தீயை அணைக்க 2000இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

இதேவேளை காட்டுத்தீயால் பாதிக்கப்பட்ட 4,000இற்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 84 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

உலக நாடுகளில் காட்டுத்தீ மோசமான சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்ட காட்டுத்தீயை உதாரணமாக கூறலாம்.

இந்நிலையில், ஜப்பானில் 50 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு பெரும் காட்டுத்தீ பரவி வருகிறது. ஒபுனாட்டோ காட்டுப் பகுதியில் 2100இற்கும் அதிகமான ஹெக்டேயர் பரப்பளவில் காட்டுத்தீ கொழுந்துவிட்டு எரிகிறது.

காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்த ஒருவரின் உடல் மீட்கப்பட்டுள்ளது. 16இற்கும் மேற்பட்ட ஹெலிகொப்டர்கள் மூலம் நீரை பீய்ச்சி அடித்து காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

# வன விலங்குகளுக்கு மறுவாழ்வளிக்கும் 'வன்தாரா'







வன்தாரா என்ற பெயரில் குஜராத் ஜாம் நகரில் அமைக்கப்பட்டுள்ள வன விலங்குகள் மீட்பு, மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு மையத்தை, பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார்.

குஜராத் மாநிலம் ஜாம் நகரில் 'வன்தாரா' என்ற பெயரில் வன விலங்குகள் மீட்பு, மறுவாழ்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பில் ஆனந்த் அம்பானி இந்த மையத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்த மையத்தை நேற்று முன்தினம் (04) பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

வன்தாரா மையம், ஜாம்நகர் ரிலையன்ஸ் சுத்திகரிப்பு மைய வளாகத்தில் 3 ஆயிரம் ஏக்கரில் அமைந்துள்ளது.

இங்கு 43 வகை உயிரினங்களில், 2 ஆயிரம் வன விலங்குகள் பராமரிக்கப்படுகின்றன. இயற்கையான வன விலங்குகள் வாழிடம் போன்று இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனந்த் அம்பானியின் கனவுத் திட்டமான வன்தாராவில், வன உயிரியல் நிபுணர்கள் உட்பட 2,100 பேர் பணியாற்றுகின்றனர்.

விலங்குகள் நலத்தை பாதுகாக்கும் அதேவேளையில், வன விலங்கு பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வையும் இந்த மையம் ஏற்படுத்தி வருகிறது.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி, அவரது மனைவி நீடா அம்பானி, அவர்களது மகன் ஆனந்த் அம்பானி மற்றும் மருமகள் ராதிகா ஆகியோரும் இந்த திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். சிங்கக் குட்டிகள், ஒட்டகச்சிவிங்கி உள்ளிட்டவற்றுக்கு பிரதமர் மோடி உணவளித்து மகிழ்ந்தார்.

# அமெரிக்காவுடனான வர்த்தகப் போரிலிருந்து பின்வாங்கப்போவதில்லை!

''அமெரிக்காவுடனான வர்த்தகப் போரிலிருந்து பின் வாங்கப் போவதில்லை'' என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.



கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரியை விதிக்கும் உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார். அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி

## கனடா திட்டவட்டம்

வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.


இந்நிலையில், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கும் அமெரிக்காவை எதிர்த்துப் போட்டியிடப்போவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா மீதான வரி விதிப்பு நடவடிக்கையை 'வர்த்தகப் போர்' என்று குறிப்பிட்டுள்ள ட்ரூடோ இதன்மூலம் அமெரிக்கக் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மேலும் அமெரிக்காவுடனான வர்த்தகப் போரிலிருந்து பின் வாங்கப்போவதில்லை. கனேடியர்கள் நியாயம் மற்றும் கண்ணியமிக்கவர்கள். சொந்த நாட்டின் நல்லிணக்கம் ஆபத்தில் இருக்கும்போது போரிலிருந்து பின்வாங்க மாட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ''அமெரிக்கா போரை விரும்பினால் சீனா இறுதிவரை போராடத் தயாராக இருக்கிறது''என்று அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரம் நேற்று (05) அறிவித்துள்ளது.இதுகுறித்து அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரகம் அதன் எக்ஸ் பக்கத்தில், ''ஃபெண்டானில் விவகாரத்தில் அமெரிக்கா உண்மையிலேயே தீர்வு காண விரும்பினால், அதற்கு சரியான வழி, மற்றவரை சமமாக நடத்துவதன் மூலம் சீனாவுடன் ஆலோசனை நடத்துவதே. ஒருவேளை அமெரிக்கா போரை விரும்பினால், அது வரி விதிப்புப் போர், வர்த்தகப் போர் அல்லது வேறு எந்த வகையான போராக இருந்தாலும் சரி, இறுதிவரைப் போராட நாங்கள் தயார்'' என்று தெரிவித்துள்ளது.

# மத்திய மாகாண ஆளுநர் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் ஆரவாரமான வரவேற்பைத் தவிர்க்க

## அமைச்சுசார் நிறுவனங்களுக்கு அறிவிப்பு




(எம்.ஏ.அமீனுல்லா)

மத்திய மாகாண ஆளுநர் கலந்துகொள்ளும் அனைத்து நிகழ்வுகள் மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களின் போது ஆரவாரமான வரவேற்பு வைபவம் முற்றாகத் தவிர்க்கப்பட்டு அதனை எளிய மற்றும் சாதாரண நிகழ்வுகளாக நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையுடன் இன்னும் பல கோரிக்கைகளையும் நடைமுறைப்படுத்துமாறு மத்திய மாகாண பிரதம செயலாளர் ஜி.எச்.எம்.ஏ. பிரேமசிங்கவால் மாகாணத்திலுள்ள அனைத்து அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் பங்கேற்கும் நிகழ்வுகளின்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மத்திய மாகாண ஆளுநர் பங்கேற்கும் நிகழ்வுகளில் தேசிய கீதம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இசைக்கப்பட வேண்டுமெனவும் அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டால் ஆயுல்வேத பானங்கள் வழங்கப்படவேண்டுமெனவும் மத்திய மாகாண பிரதம செயலாளர் ஜி.எச்.எம்.ஏ. பிரேமசிங்கவால் வெளியிடப்பட்ட இந்தக் கடிதத்தின் பிரதிகள் மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து அமைச்சின் செயலாளர்கள், பொதுச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர், உள்ளூராட்சி சபைச் செயலாளர்கள், அனைத்து பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



ஹட்டன் - செனன் தோட்ட கே.எம். பிரிவில் கடந்த 03 ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் நேற்று முன்தினம்(04) காலை நேரில் சென்று பார்வையிட்டதோடு அம்மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய பொருட்களையும் வழங்கி வைத்தார்.



சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாமொன்று அண்மையில் மாத்தளை பௌத்த மந்திரிய நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

படம்: யடவத்த செய்தியாளர்

## பேராதனையில் 'மாதரே' நிகழ்ச்சித் திட்டம்

(பேராதனை நிருபர்)

உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள 'மாதரே' எனும் தொனிப்பொருளிலான கலை நிகழ்ச்சி இன்று (06) வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு பேராதனை பொறியியற் பீட ஈ.ஓ.ஈ.பெரேரா மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் கலை, சங்கீதம், நாட்டியம் மற்றும் பாரம்பரிய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் கலந்துகொள்ளுமாறு தமிழ்ச் சங்க ஏற்பாட்டுக் குழுவினர் சகலருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர். இவ்வைபவத்தில் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் எஸ். பிரசாந்தன் உரையாற்றவுள்ளார்.

# போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட வாகனங்களை வைத்திருந்த மூவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இரண்டு சொகுசு வாகனங்களுக்கு போலி இலக்கத்தகடுகளைப் பொருத்தி வைத்திருந்த மூவர் சந்தேகத்தின்பேரில் நேற்று முன்தினம் (04) பெல்மதுளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பெல்மதுளை, பாதகட பிரதேச கராஜ் ஒன்றிலிருந்து ஒரு சொகுசு ஜீப்பும் காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகவும் இதுவிடயமாக நடத்தப்பட்ட விசாரணைகளின் பிரதிபலனாக எம்பிலிப்பிட்டிய மற்றும் மாமண்டல பகுதிகளில் வசிக்கும் மூவரே கைது செய்யப்பட்டதாகவும் பெல்மதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தொழில் முயற்சியாளர்களை ஒருங்கிணைக்கும் வேலைத்திட்டம்





(இரத்தினபுரி நிருபர்)

தேசிய பொருளாதாரத்துக்கு பதினைந்தாயிரம் தொழில்முயற்சியாளர்களை ஒருங்கிணைக்கும் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் (RDB) திட்டத்தின் சப்ரகமுவ மாகாண வேலைத்திட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் நேற்று முன்தினம் (04) இரத்தினபுரி கிராண்ட் கார்டியன் மண்டபத்தில் இடம்பெற்றது.இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 150 தொழில்முயற்சியாளர்களுக்கு RDB வங்கியால் 300 மில்லியன் ரூபா தொழில்முயற்சி கடன் வசதியாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண சபை முன்னாள் உறுப்பினர் புஸ்பகுமார திசாநாயக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றதிகாரி ஜனித்த பிரியசாந்த உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



ஹட்டன் - செனன் தோட்ட கே.எம். பிரிவில் 03 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணிச் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான அனுஷா சந்திரசேகரன் நேற்று(05) நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் அம்மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ஆர்.எவ்.எம்.சுஹெல்)

# செம்மணி மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து கலந்துரையாடல்

(யாழ். நிருபர்)

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் மற்றும் தடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி வ.ஆனந்தராஜா தலைமையில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

முறைப்பாட்டாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷும் காணாமலாக்கப்பட்டோரது சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி தற்பரனும் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது, வெறுமனே பொலிஸாரை மாத்திரம் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தாமல், சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களையும் பாதுகாப்புப் பணிகளில் உள்வாங்குகின்றபோது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமென்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று சித்துப்பாத்தி இந்து மயானத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் ஐந்து உறுப்பினர்களின் பெயர் விபரங்களை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கானது தொடர் விசாரணைகளுக்காகத் திகதியிடப்பட்டது.

# முத்திரையிடப்படாத தராசுக்கு சீல்

(யாழ். நிருபர்)

வலி. கிழக்கு நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க வாழைக்குலை நிறுத்தல் கருவி (தராசு) ஒன்றுக்கு மாவட்ட அளவை நிறுவைகள் கண்காணிப்பு அதிகாரிகளால் சீல்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வாழைக்குலை உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் பல வருடங்களாக வாங்கப்பட்டு வருகின்றன.


இச்சங்கம் தொடர்பில் காலத்துக்குக்காலம் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட நிலையில், தற்போது நிறுத்தல் கருவி முத்திரை இடப்படாமல் பாவிக்கப்படுவதாக யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் அளவை நிறுவைகள் பிரிவு அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (04) செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்குச் சென்ற அதிகாரிகள் அங்கு வாழைக்குலைகள் நிறுப்பதற்கான கருவிகளைப் பரிசோதனை செய்தனர். ஒரு நிறுத்தல் கருவி பல வருடங்களாக முத்திரையிடப்படாமல் பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த கருவிக்கு சீல் வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொறுப்பான மாவட்ட அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த விடயம் தொடர்பில் உறுதிப்படுத்தியதுடன், தமது கொழும்பு தலைமையகத்துடன் கலந்துரையாடி அவர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

# ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தில் தூய இலங்கை வேலைத்திட்டம்





(யாழ். நிருபர்)

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தில் நேற்று (05) தூய இலங்கை (கிளீன் ஸ்ரீலங்கா) வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

காலை 08.00 மணியிலிருந்து 12.00 மணிவரை பாடசாலையைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தப்பட்டதுடன், இலங்கை இராணுவத்தின் 10ஆவது விஜயபாகு படைப்பிரிவால் உடைந்த கதிரை, மேசைகள் மறுசீரமைக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் மருதங்கேணி 10ஆவது விஜயபாகு படையணியின் இராணுவத்தினர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்ட செயலகத்தில் மாபெரும் தொழிற்சந்தை







(சிவகுமார் திவியா)

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன், வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய மாபெரும் தொழிற்சந்தை நேற்று (05) வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை அதிதிகளான வவுனியா மாவட்ட செயலாளர் சரத்சந்திர , உதவி மாவட்ட செயலாளர் சாபர்ஜா, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) நா.கமலதாசன் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சனா குமார ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இத்தொழிற்சந்தைக்கு 30க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் வருகை தந்திருந்ததுடன், 100க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பைப் பெறும் நோக்குடன் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி கிழக்கு வர்த்தகர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு வர்த்தகர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நேற்று (05) வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.

வடமராட்சி கிழக்கு வர்த்தகர் சங்கத் தலைவர் தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்,

''வர்த்தக நடவடிக்கைகள் நவீனமயமாக்கப்பட்டு சுற்றுலாவாசிகளைக் கவரக்கூடிய வர்த்தக நிலையங்களாக வடமராட்சி கிழக்கு வர்த்தக நிலையங்களை மாற்றியமைக்க வேண்டும்.

எமது பிரதேசத்துக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகிறார்கள். ஆனால், கடற்கரையை மட்டுமே பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். அவர்கள் தங்கிநின்று அனைத்து வகையான உணவுகளையும் விரும்பி உண்ணுவதற்கான வர்த்தக நிலையங்கள் இங்கு இல்லை.

எனவே, எமது பிரதேச வர்த்தக நிலையங்களை நவீனமயமாக்குவதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து எமது பிரதேச வர்த்தக நிலையங்களை மேம்படுத்த முடியும்.

வர்த்தகர்கள் நியாயமான விலையில் தரமான பொருட்களைக் வழங்குவதன் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும்'' – என்றார்.

நிகழ்வின் இறுதியில் வடமராட்சி கிழக்கு வர்த்தகர் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. வர்த்தகர் சங்க புதிய தலைவராக யாழ். மருதன் தெரிவுசெய்யப்பட்டார். இந்நிகழ்வில் அதிகளவான வர்த்தகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதி தோல்வியுடன் ஒருநாள் கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்த ஸ்மித்

நடப்பு சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதியில் இந்தியாவிடம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, அவுஸ்திரேலிய அணியை வழிநடத்திய ஸ்டீவ் ஸ்மித் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று (05) அறிவித்தார். 35 வயதான ஸ்மித் தனது நாட்டுக்காக டெஸ்ட் மற்றும் ரி20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஒருநாள் கிரிக்கெட்டுக்கு அறிமுகமான ஸ்மித் 170 ஒருநாள் போட்டிகளில் விளையாடி, 43.28 சராசரியுடன் 5800 ரன்கள் மற்றும் 86.96 ஸ்ட்ரைக் ரேட்டைக் கொண்டுள்ளார். இதில் 12 சதங்கள் மற்றும் 35 அரைச்சதங்கள் அடங்கும். ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்காக அதிக ரன்கள் எடுத்த 12வது வீரராக தனது ஒருநாள் கிரிக்கெட் வாழ்க் கையை முடித்துள்ளார். லெக்ஸ்பின்னிங் ஆல்ரவுண்டராக அறிமுகமான இவர், 28 விக்கெட்டுகளையும் வீழ்த்தி 90 பிடியெடுப்புகளை எடுத்துள்ளார்.



# 2025 ஆசியக்கிண்ணம் இலங்கையில்?

2025ஆம் ஆண்டு செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் இந்த மாதக் கடைசியில் நடத்த ஏற்பாடாகியிருக்கும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரை பாகிஸ்தான் அணி இந்தியா வராத நிலையில், இலங்கை அல்லது ஐக்கிய அரபு இராச்சியம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணி பாகிஸ்தான் செல்லாத நிலையில், இரு நாடுகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில், ஒரு நாடு மற்ற நாட்டில் நடைபெறும் போட்டிகளின்போது பொதுவான மைதானத்தில் ஆட இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏற்படும் சிக்கலைத் தவிர்க்கும் வகையில் ஆசியக் கிண்ணத் தொடரை நடத்தும் உரிமையை இந்தியா பெற்றபோதும் அதனை பொதுவான மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்மூலம் போட்டி அட்டவணையில் கடைசி நேரத்தில் ஏற்படக்கூடிய குழப்பங்களைத் தவிர்ப்பதற்கு ஆசிய கிரிக்கெட் பேரவை முயன்று வருகிறது.

2023 இல் ஒருநாள் வடிவத்தில் பாகிஸ்தானில் ஆசிய கிண்ணத்தை நடத்த ஏற்பாடான நிலையில், இந்திய அணியின் போட்டிகள் கலப்பு முறையில் இலங்கையிலேயே நடத்தப்பட்டது. இதனால் இந்தத் தொடரில் நடந்த 13 போட்டிகளில் நான்கு ஆட்டங்கள் மாத்திரமே பாகிஸ்தானில் நடைபெற்றது.

இம்முறை ஆசிய கிண்ணத் தொடரில் எட்டு அணிகள் பங்கேற்கவுள்ளன. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான் மற்றும் ஹொங்கொங் அணிகள் ஆடவுள்ளன. 2026 ரி20 உலகக் கிண்ணத்துக்குத் தயாராகும் வகையில் இந்தத் தொடர் டி20 வடிவத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.




# விளையாட்டுத் துளிகள்

மும்பை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான பத்மகர் ஷிவல்கர் (வயது 84) உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் மரணமடைந்தார். இடது கை சுழற்பந்து வீச்சாளரான அவர் 124 முதல் தர போட்டிகளில் விளையாடி 589 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாவிட்டாலும் உள்நாட்டுப் போட்டிகளில் இவரது பங்களிப்பைப் போற்றும் விதமாக இவருக்கு கடந்த 2017ஆம் ஆண்டு பி.சி.சி.ஐ., சி.கே.நாயுடு வாழ்நாள் விருது வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★★★★

ரஞ்சி கிண்ணக் கிரிக்கெட்டில் மகுடம் சூடிய விதர்பா அணிக்கு ரூ.3 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்படுமென விதர்பா கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. மேலும், ஒரே சீசனில் 69 விக்கெட்டுகளை வீழ்த்தி அமர்க்களப்படுத்திய சுழற்பந்து வீச்சாளர் ஹார்ஷ் துபேவுக்கு ரூ.25 இலட்சமும் தலைமைப் பயிற்சியாளர் உஸ்மான் கானிக்கு ரூ.15 இலட்சமும் வழங்கப்படவுள்ளது.

★★★★★★★★★★★★★★★★

சர்வதேச கிரிக்கெட்டில் 335 பந்துகளைப் பிடித்து அதிக பந்துகளைப் பிடித்த இந்திய வீரர் என்ற சாதனையை விராட் கோஹ்லி படைத்தார். அடுத்தபடியாக ராகுல் டிராவிட் 334 பந்துகளும் அசாருதீன் 261 பந்துகளும் சச்சின் 256 பந்துகளையும் பிடித்துள்ளனர். மேலும், சர்வதேச கிரிக்கெட்டில் அதிக பந்துகளைப் பிடித்தவர்களின் பட்டியலில் ஜெயவர்த்தன (440), ராஸ் டெய்லர் (351), ரிக்கி பொண்டிங் (364) ஆகியோருக்கு அடுத்து 4ஆவது இடத்தில் விராட் கோஹ்லி உள்ளார்.

★★★★★★★★★★★★★★★★

ஐ.சி.சியின் அனைத்து வகையான உலகக்கிண்ணத் தொடர்களினதும் இறுதிப் போட்டிக்கு (2023 டெஸ்ட் சம்பியன்ஷிப், 2023 ஒருநாள் உலகக்கிண்ணம், 2024 ரி20 உலகக்கிண்ணம், 2025 சம்பியன்ஸ் கிண்ணம்) அணியை அழைத்துச் சென்ற முதல் கேப்டன் என்ற பெருமையை ரோஹித் சர்மா பெற்றுள்ளார். ரோஹிட் 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் இந்திய அணியின் முழுநேர கேப்டனாகப் பதவியேற்றார்.

# சாய்ந்தமருது அல்- ஹிலால் இல்ல விளையாட்டு போட்டியில் கஸ்மன் இல்லம் சம்பியன்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல் - ஹிலால் பாடசாலையில் பல வருட காலமாக இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறாமலிருந்த நிலையில், 2025ஆம் ஆண்டுக்கான போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் கடந்த வாரம் சாய்ந்தமருது பொலிவேரியன் மைதானத்தில் இடம்பெற்றன.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடியதோடு மட்டுமல்லாமல், இயற்கை முறையில் இல்லத்தையும் அமைத்து முதலாம் இடத்தைத் தனதாக்கிய கஸ்மன் இல்லம் (பச்சை) 226 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இரண்டாமிடத்தை 200 புள்ளிகளைப் பெற்று ரையான் இல்லம் (நீலம்) பெற்றுக் கொண்டதோடு, 191 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தை சலா இல்லம் (மஞ்சள்) பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்டப் பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம் ஜாபீர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

# இளம் உதைபந்து வீரரிடம் வழிப்பறி மெக்சிகோவில் சம்பவம்

உருகுவேவைச் சேர்ந்த இளம் உதைபந்து வீரரான நிகோலஸ் ஃபொன்சேகா மெக்சிகோவைச் சேர்ந்த லியோன் எனும் கழகத்துக்காக விளையாடிவரும் நிலையில், மெக்சிகோ நாட்டில் இடம்பெற்ற வழிப்பறிக் கொள்ளையில் அவரது வாகனம் பறிக்கப்பட்டுள்ளது.

நிகோலஸ் தனது அணியுடன் பயிற்சி மேற்கொள்வதற்காக மெக்சிகோவின் குவானாஜுவாடோ மாநிலத்தின் லியோன் நகரத்தை நோக்கி தனது வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது ஜலிஸ்கோ மாநிலத்தின் அருகிலுள்ள நெடுஞ்சாலையில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட மர்ம நபர்கள் அவரது வாகனத்தைப் அபகரித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

ஆனால், நிகோலஸ் கடத்தப்பட்டு ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் இறக்கிவிடப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்ட நிலையில், அவரது அணி அதனை மறுத்துள்ளது. இதுகுறித்து அவரது அணித் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், நிகோலஸ் தற்போது நலமாகவுள்ளதாகவும் அவரது அணியினருடன் இணைந்துவரக்கூடிய போட்டிக்காகத் தற்போது பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மர்ம நபர்களைப் பிடிக்க குவானாஜுவாடோ பொலிஸார் ஜலிஸ்கோ அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகக் கூறியுள்ளனர். ஆனால், இந்த வழிப்பறிக்கொள்ளையானது எப்போது நடைபெற்றதென்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# நீர்கொழும்பு அல் - ஹிலால் மத்திய கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி

(எம்.இஸட்.ஷாஜஹான்)

நீர்கொழும்பு அல் - ஹிலால் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பும் கடந்த வாரம் நடைபெற்றன. கல்லூரி அதிபர் எம்.எஸ்.எம். ஸஹீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நீர்கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.எல்.ஏ.எஸ். கம்புருகமுவ,வலயக் கல்வி அதிகாரிகள், கோட்டக் கல்வி அதிகாரி ஏ.ஏ.எம்.எஸ். துஷாரி, அயற்பாடசாலை அதிபர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

விளையாட்டுப் போட்டி நிகழ்வில் அஞ்சலோட்டப் போட்டிகள், குறுந்தூர ஓட்டப் போட்டிகள், அணிநடை, விநோத உடைப் போட்டி உடற்பயிற்சிக் கண்காட்சி உட்பட பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அத்துடன், பெற்றோர்களுக்கான ஓட்டப் போட்டியும் இடம்பெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.



# 14 ஆண்டுகளின் பின் ஆஸியை வீழ்த்திய இந்தியா

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டிக்கு முதல் அணியாக இந்தியா தகுதிபெற்றது. இதன் மூலம், ஐ.சி.சி. தொடர்களின் நொக் அவுட் சுற்றில் கடந்த 14 ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவை வீழ்த்த முடியாமல் இருந்த இந்திய அணியின் சோகமான வரலாறு முடிவுக்கு வந்தது.

டுபாயில் நடைபெற்ற பரபரப்பான முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி அவுஸ்திரேலிய அணியை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து 49.3 ஓவர்களில் 264 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. 264 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய இந்திய அணி 48.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 267 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக 84 ஓட்டங்களைக் குவித்த விராட் கோஹ்லி தெரிவானார்.






மாணவர்களின் கல்வி வழிகாட்டியான
ஜூனியர் தமிழன்
மார்ச் மாத சஞ்சிகைகள்
தற்போது விற்பனையில்...
பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
074 1684643 / 0777 983308

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7